Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM, NET
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 05 (24.06.2004) வியாழக்கிழமை இதழ்:265

## நாடாளுமன்றை கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் கோரும்!

(கொழும்பு)

அடுத்த மாதம் 20 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு கோரும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் தீர்மானத்தை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர், நான்கு நாடாளுமன்ற அமர்வுகள் மட்டுமே இதுவரை நடைபெற்றுள்ளன.

எனினும், இதுவரை ஆலோசனை ஆட்சிக்குழு, தெரிவு ஆட்சிக்குழு போன்றவை நியமிக்கப்படாததுடன், எந்தவித பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

இவ்வாறு நாடாளுமன்றச் செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெற்றுவருவதால், நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடநத 21 ஆம் திகதி எதிர்க்கட்சி நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா தப்பியோட உதவி; பதவி விலகினார் அலிசாகிர்!



## ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நெருக்கடி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை, பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்துச் சென்றதான குற்றச்சாட்டுக்களையடுத்து சர்ச்சையில் சிக்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அலிசாகிர் மௌலானா நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அலிசாகிர் மௌலானா

## கருணாவுக்கு உதவிய சம்பவம்; ஐ.தே.கவுக்கு தொடர்பில்லையாம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கபபட்ட கருணாவை, நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா கிழக்கிலிருந்து பாதுகாப்பாக கொழும்புக்குக் கூட்டிச்சென்றதாக வெளியான சம்பவம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி எதையும் அறிந்திருக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவின் உதவியுடன் கருணா கொழும்புக்குத் தப்பிச்சென்றதாக - கருணாவின் பிடியிலிருந்து தப்பிவந்த நான்கு பெண் போராளிகளும் மட்டக்களப்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழக

## ஊழியர்கள் வேலைநிறுத்தம் சுமுகமாக முடியும் சாத்தியம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினருக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பல விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2 மணிமுதல் 5 மணிவரை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக பீடாதிபதிகள், சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலின் பின்னர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரவி கருணாநாயக்கவை— கைது செய்வதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சி தோல்வி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு

நாயக்கவின் வீட்டிற்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்யப்போவதாகத் தெரி

## நேற்றைய கூட்டத்தின் முடிவுகள்; இன்று பொதுச்சபை ஆராயும்!

### ஊழியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் மேற்கொண்டுவரும் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக நேற்றுப்

சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரை

# மேற்கொண்ட முயற்சி தோல்வி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை கைது செய்ய பொலிஸார் மேற்கொண்ட முயற்சி ஆதரவாளர்களும், அரசியல் தலைவர்களும் காட்டிய எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது.

நாடாளுமன்ற வீதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் வீட்டிற்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்யப்போவதாகத் தெரிவித்தனர்.

இதன்போது அங்கு கூடிய ஆதரவாளர்களும் முன்னாள் அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், கருஜெயசூரிய, எஸ்.பி.திஸநாயக்க உள்ளிட்ட அரசியல் கட்சி உறுப்பினர்களும் அவரைக் கைது செய்வதற்கு எதிர்ப்புத் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஊழியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் மேற்கொண்டுவரும் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக நேற்றுப் பிற்பகல் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஊழியர் சங்கம் ஏற்றுக்கொள்வதா? என்பது குறித்து இன்று காலை இடம்பெறும் ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டத்திலே தீர்மானிக்கப்படும் என ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலில் பல்கலைக்கழநிர்வாகத்தால் முன்வைக்கப்பட்ட முடிவுகளில் தெளிவின்மை காணப்படுவதால் இது தொடர்பாக ஊழியர் சங்கம் நுணுக்கமாகப் பரிசீலித்து வருவதாகவும் இது தொடர்பான இறுதி முடிவு இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ள ஊழி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மிதிவெடி ஆபத்தை வெளிப்படுத்தி கோப்பாயில் நேற்று பேரணி!



மிதிவெடி அபாயக் கல்வி வாரத்தினை முன்னிட்டு நேற்று கோப்பாயில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.காலை 8 மணியளவில் அத்தியார் இந்துக் கல்லூரியிலிருந்து ஒரு தொகுதியினரும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலிருந்து இன்னொரு தொகுதியினரும் பேரணியாகப் புறப்பட்டு -

எமது நாட்டில் கண்ணிவெடிகளைப் புதைக்காதீர்கள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவில் புலிகள் மீதான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்குமாம்!

## உதவி இராஜாங்க செயலர் றொக்கா

பயங்கரவாதப் பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயர் நீக்கப்படமாட்டாதென அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரீனா றொக்கா தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை உறுதியாக கைவிடவேண்டும். அவற்றிலும் சிறுவர்களை தமது படையில் இணைப்பதனை நிறுத்த வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யும்வரை நாம் அவர்கள் மீதான தடையை விலக்க மாட்டோம்.

கடந்த இரண்டு வருடமாக விடுதலைப் புலிகளுக்கும் - இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் நடைபெற்றுவரும் சமாதானப்பேச்சுவார்த்தையை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சி மீள ஆரம்பிக்கப்படுமென நான் நினைக்கவில்லை. ஆனாலும் இரு பகுதியிடையேயும் அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வே தனது செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# கல்வி அபிவிருத்தி குறித்து திருமலையில் மாநாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்துக் கல்வி வலயக் கல்விப்பணிப் பாளர்களும் குடாநாட்டின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக திருமலைக்குச் சென்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தலைமையில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்தில் நேற்றும் இன்றும் இடம்பெறுகின்ற கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் திருகோணமலைக்குச் சென்றுள்ளனர்.

இந்த மாநாட்டில் குடாநாட்டின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

யாழ். சைவசமய உயர்குடி 1974 ஆம் ஆண்டு, ரேவதி கிரகபாவம் குறைந்த A.L, Dip in Eng, Dip in Computer soft, M.S. office படித்த N.C.C 2 ஆம் ஆண்டு 5′4″ உயர பொதுநிற மகளுக்கு மணமகன் தேவை. சாதகக்குறிப்பு மற்றும் முழு விபரங்களுடன் தொடர்புகொள்க.

விளம்பர இல - 31, C/O நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# கௌரவிப்பு விழா

(சுதுமலை)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் லூஸ் மாஸ்ரர் புகழ் விகட விற்பன்னர் ஐசாக் இன் பராசாவின் கௌரவிப்பு விழா இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வாகீசன் மண்டபத்தில் பிற்பகல் 1 மணிக்கு பிரதி அதிபர் தம்பாப்பிள்ளை தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் லூஸ் மாஸ்ரரின் நகைச்சுவை விருந்தும் நடன நிகழ்வும் நக்கீரன் பட்டிமன்றக் குழுவினரின் பட்டிமன்றமும் ஆசிரியர் இ. ஷாம்குமாரின் கவிதையும் இடம்பெறவுள்ளதாக விழாக்குழுவினர் தெரிவித்தனர். (91)


## ராஜா யாழ்ப்பாணம்.

விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த



அருள்

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 முதல்

கில்லி

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30மட்டும் (பு.நே)

(சி-2623)

## நிறஞ்சனாஸ் சங்கானை

முரளி, கௌசல்யா நடித்த

காலமெல்லாம் காதல் வாழ்க

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)

வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

EHPOSURE (சி-2621)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன

சூர்யா, மாதவன், மீராஜாஸ்மின், ஈஷா நடித்த



ஆய்த எழுத்து

(சி-2622)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)



## சீர்மேவு யாழ்ப்பாணம் - சுன்னாகம்

## மயிலணி அருள்மிகு கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா



இன்று தேர் ஏறிவரும் முருகப் பெருமானின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.

மயிலணி, சுன்னாகம்.

ஜனசக்தி சனசமூக நிலைய இந்து இளைஞர் சமூகத்தினர்.



## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள எலிம் சிறுவர் இல்லத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

| | |
|---|---|
| ஆண்பிள்ளைகள் பராமரிப்பாளர் | - ஆண் (35-50 வயது) |
| பெண்பிள்ளைகள் பராமரிப்பாளர் | - பெண் (40-50 வயது) |
| சமையலாளர் | - ஆண் (35-50 வயது) |
| தோட்ட வேலையாள் | - ஆண் (35-50 வயது) |

குறிப்பு :-

விண்ணப்பதாரர் சுயவிபரக் கோவையுடன், உறவினரல்லா இருவரின் நற்சாட்சிப்பத்திரத்துடன் 26.06.2004 ஆம் திகதிக்கு முன் நேரில் அல்லது தபாலில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நிர்வாகி
எலிம் சிறுவர் இல்லம்
மெமோரியல் ஒழுங்கை
மானிப்பாய்.

(சி-767)



# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## ஜூன் 21 தொடக்கம் ஜூன் 27 வரை

### மிதிவெடியினால் பாதிப்புற்றோர்கள் பற்றிய தகவல்கள்

(யாழ்.மாவட்டம்)

- யாழ்.குடாநாட்டில் மிதிவெடியினால் பாதிக்கப்பட்டோர் 664 பேர்.
- பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் 20 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்ட ஆண்கள்.
- பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் கூலித்தொழிலாளர்கள்.
- பாதிக்கப்பட்டோர் அதிகமுள்ள பிரதேச செயலர் பிரிவுகள், கோப்பாய், தென்மராட்சி, தெல்லிப்பளை, நல்லூர்.




District Mine Action Office, Jaffna

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(C-2677)

# எதிர்க்கட்சிகளால் ஒருபோதும் அரசைக் கவிழ்க்க முடியாது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சிகளால் ஒருபோதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைப் பதவி கவிழ்க்க முடியாதென ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளுக்கு இடையில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. இத்தகையதொரு நிலையில் அரசுக்கு எதிராக 114 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளமையை ஆதாரமாகக் கொண்டு, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பாகச் செயற்படப் போகின்றன எனக் கூற முடியாது.

முழுமையான பங்களிப்புடனும், பலமான அடித்தளத்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்பதற்காகவே, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாகத் தமது அரசாங்கம் காலம் தாமதித்து வருகிறது.

இடம்பெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் தமது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றி பெறும். இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இரண்டாவது மக்கள் ஆணையாக அமையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பை மாற்றுவது தொடர்பாக நாடாளுமன்றத்தைப் புறக்கணித்துச் செயற்படும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லையென இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

### ஜே.வி.பியின் தொழிற்சங்கப் பிரதிநிதி இராஜினாமா

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை காகித ஆலையில் ஜே.வி.பி.யின் தொழிற்சங்க தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் தனது அங்கத்துவத்தை இராஜினாமாச் செய்தார்.

வாழைச்சேனை காகித ஆலையில் அண்மையில் ஜே.வி.பி.யினரின் தொழில் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகையொன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

இதனால், தாம் இந்தத் தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் பெற்றதை சக ஊழியர்கள் விரும்பவில்லை என்பதால் இவர் இராஜினாமாச் செய்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நிகால் கருணாரட்ணவை கைது செய்ய நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவின் ஆதரவாளர்களைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முன்னாள் தலைமை அதிகாரி நிகால் கருணாரட்ணவை கைது செய்யுமாறு உயர்நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான எஸ்.பி. திஸநாயக்கவின் ஆதரவாளர்கள் பலர் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரால் மிரட்டப்பட்டு துன்புறுத்தப்பட்டதோடு, அவர்களுக்குச் சொந்தமான பல வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சுமார் 13 பேர் மீது உயர் நீதிமன்றில் வழக்குப் பதிவாகியிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளில் உயர்நீதிமன்றத்தின் அழைப்பாணையினை நிகால் கருணாரட்ண மதிக்காமல் மீறியும் வந்ததாலேயே அவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புலனாய்வு அதிகாரியின் கைத்துப்பாக்கி மாயம்

(கொழும்பு)

இலங்கையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரது கைத்துப்பாக்கி ஒன்று காணாமல் போயிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான ஏ.ஏ.விக்கிரமநாயக்க என்பவரின் ஒன்பது மில்லி மீற்றர் ரகத்தைச் சேர்ந்த கைத்துப்பாக்கியே காணாமல் போயுள்ளதாக தெரிய வருகிறது.

இப்புலனாய்வுத்துறை அதிகாரி கூட்டம் ஒன்றில் கலந்துவிட்டு அலுவலகம் நோக்கித் திரும்பும்போது, அவரது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி காணாமல் போயிருப்பதை அவர் அவதானித்ததாகவும் பொலிஸில் முறைப்பாடு செயப்பட்டுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட புலனாய்வு அதிகாரி வழங்கிய தகவல்களின் அடிப்படையில், பலரிடம் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள குருந்துவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எதுவித தகவல்களும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

## க.பொ.த உயர்தர பெறுபேற்றில்

# அகில இலங்கை ரீதியில் வன்னிப் பகுதியே முன்னணியில்

(கிளிநொச்சி)

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில், அகில இலங்கை ரீதியில் - வன்னிப் பிராந்தியம் முன்னணியில் இருந்ததாக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

வட்டக்கச்சி முருகானந்த மகா வித்தியாலயத்தில் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கட்டட திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கடந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் வன்னிப் பிராந்தியம் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் முதலாவது இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாவது இடத்தையும்,வவுனியா மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டு வரை முன்னணியில் திகழ்ந்த யாழ்ப்பாண மாவட்டம் அகில இலங்கை ரீதியில் 14 ஆவது இடத்தையும், மிகப்பெரிய வசதி வாய்ப்புக்களுடன் திகழும் கொழும்பு மாவட்டம் 15 ஆவது இடத்திலும் இருக்கின்றன.

வன்னி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி நிலைக்கு ஆசிரியர்களே முக்கிய காரணம் என்று இளங்குமரன் மேலும் தெரிவித்தார்.



குக்குலே கங்கவில் நடைபெற்றுவரும் ஐ.நா. சமாதான உதவி நடவடிக்கைகளுக்கான பன்னாட்டு படையினர் பயிற்சியில் இலங்கைப் படையினருடன் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் படையினர் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

# கொள்ளையர்கள் நாட்டில் உருவாக அரச திணைக்களங்களே காரணம்

## நிதியமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

நாட்டிலுள்ள சுங்கத் திணைக்களம், கலால் திணைக்களம், இறைவரித் திணைக்களம் ஆகியவற்றில் ஊழல் மலிந்து காணப்படுகிறது. இதன் காரணமாகவே கொள்ளையர்கள், பாதாள உலகக் கோஷ்டியினர் உருவாகுகின்றனர் என நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செயலமர்வு ஒன்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே கலாநிதி சரத் அமுனுகம இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்க திணைக்களங்களை மறுசீரமைக்காமல் உண்மையான பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியாது. நிதியமைச்சர் என்ற வகையில் நான் வினைத்திறனற்ற ஐந்து அரசாங்க நிறுவனங்களுடன் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை, போக்குவரத்துச்சபை, ரயில்வே திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் ஆகியவையே இந்த ஐந்து நிறுவனங்களாகும்.

தற்போது கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தில் இருந்து விடுபட்டுள்ளோம். இந்த அரச நிறுவனங்களை மறுசீரமைக்காமல் இருந்தால் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி குறித்து நினைத்துப் பார்க்க முடியாது.

சமூக அபிவிருத்தி என்பது முக்கியமானதாக காணப்படுகின்றபோதும், இதன்மூலம் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட அனுமதிக்கமுடியாது.

அரச நிறுவனங்களில் உள்ளவர்கள் சலுகைகளுக்கு அடிமையாகி நிறுவனச் சொத்துக்களை வீணாக்குவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

குறிப்பாக இறைவரி திணைக்களம், சுங்கத் திணைக்களம், கலால திணைக்களம் தொடர்பாக நாள்தோறும் முறைப்பாடுகள் வருகின்றன. இதனால்தான் நாட்டில் கசினோக் கலாசாரம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

எமது நாட்டில் கொள்ளையர்கள், பாதாள உலக கோஷ்டிகள் உருவாக இவையே காரணம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மாகாண சபைத் தேர்தல்:

# தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கள் நேற்று ஆரம்பமாகின.

இன்றும் தபால்மூலம் வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்க முடியுமென எதுவித தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்க தெரிவித்தார்.

இந்தமுறை தபால்மூலம் வாக்களிப்பதற்கு 126 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர். ஊவா, வடமத்திய, சப்பிரகமுவ, மத்திய, தென், மேல் மாகாணசபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி செயலக கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி

# ஊடகங்களுக்குப் பொய்யான தகவல் இரகசியப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி ஊடகங்களுக்கு பொய்யான தகவல்கள் அடங்கிய போலிப் பத்திரிகையறிக்கையை அனுப்பியது யார் என்பதைக் கண்டறிய இரகசிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடகப் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ரெலிகொம், இலங்கை கிரிக்கெட் சபை ஆகியவற்றின் முன்னாள் தலைவரான திலங்க சுமதிபாலவிற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை நிபந்தனைகளுடன் பிணை வழங்கியது.

இந்த வழக்கு குறித்து நீதிமன்றத்துறை உத்தியோகத்தர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் - அரச, தனியார் ஊடகங்களுக்கு பத்திரிகையறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி செயலகம் அப்படியான அறிக்கை எதனையும் பக்ஸ் மூலம் அனுப்பவில்லை என மறுத்துள்ளது.

அப்படியானால் ஜனாதிபதியின் கடிதத் தலைப்பை பயன்படுத்திய ஊடகங்களுக்கு பத்திரிகை அறிக்கை அனுப்பியது யார் என்பதைக் கண்டறிய இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# திருகோணமலை துறைமுகப் பகுதியில் இருவர் கைது!

(கொழும்பு)

திருகோணமலையில், கடற்படையினரின் இறங்குதுறைக்கு அருகில் சட்டவிரோதமாக மீன்பிடித்த இருவரை கடற்படையினர் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் - சல்லிக் கிராமவாசிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# டென்மார்க் - சுவீடன் அணிகளும் காலிறுதிக்குத் தகுதி பெற்றன!



ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் 'சி' பிரிவின் இறுதி லீக் ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் மோதிய டென்மார்க் - சுவீடன் அணிகள் தலா 2 கோல்களை அடித்து சமநிலை பெற்றபோதும் இரு அணிகளுமே காலிறுதிக்கான வாய்ப்பைப்பெற்றன.

போர்ட்டோ நகரில் நடந்த போட்டியில் மோதிய இந்த இரண்டு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றும், ஒரு போட்டியில் சமநிலை பெற்றும் இருந்ததால் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தன.

இதனால் சம பலத்துடன் இருந்த இரு அணிகளினதும் ஆட்டம் ஆரம்பம் முதலே



விறுவிறுப்பானதாக இருந்தது.

29 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்ட இந்தப் போட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை பந்தை இரு அணியினரும் சமநேரத்திற்கு தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தன.

முதல் பாதி ஆட்டத்தில் - ஆட்டம் தொடங்கி 28 ஆவது நிமிடத்தில் டென்மார்க் அணி வீரர் ஜோன் டால் தொம்சன் தனது அணி சார்பில் முதலாவது கோலை அடித்தார்.

இதன்மூலம் முன்னணி பெற்றிருந்த டென்மார்க் அணிக்குப் பதில்கோல் அடிக்க சுவீடன் வீரர் மெல்பேர்க் 39 ஆவது நிமிடத்தில் முயன்றபோதும் பந்து கோல்போஸ்டில் பட்டு வெளியேறியது.

ஆயினும், சோர்ந்து விடாமல் சுவீடனின் ஹென்றிக் லோர்சன் தனக்குக் கிடைத்த பனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி 47 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்து சமப்படுத்தினார்.

இரு அணிகளும் சமநிலையில் இருந்ததால் இரண்டாவது பாதி நேர ஆட்டம் மேலும் விறுவிறுப்பாக இருந்தது. ஏற்கனவே ஒரு கோலை முதலாவது ஆட்டத்தில் அடித்திருந்த டென்மார்க் வீரர் தொம்சன் 66 ஆவது நிமிடத்தில் அடுத்த கோலை அடித்தார்.

இதன் பின்னர் சுவீடன் அணியினர் மேலும் உத்வேகத்துடன் விளையாடினர். ஆயினும்,



சுமார் இருபத்திரண்டு நிமிடப் போராட்டத்தின் பின்னர் - 88 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திய மத்தியாஸ் ஜோன்சன் தமது அணிக்காக ஒரு கோலை அடித்தார்.

ஆட்டம் முடிவுறும் நேரத்தில் சுவீடன் இந்த கோலை அடித்ததால் - டென்மார்க் அணியினரால் மேலதிக கோல் எதையும் அடிக்கமுடியாமல் போனது. இதனால் 2:2 என்ற அடிப்படையில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

5 புள்ளிகளைப் பெற்ற சுவீடன் அணி 8 கோல்களைப் போட்டிருந்ததாலும், டென்மார்க் அணி 5 புள்ளிகளைப் பெற்று 4 கோல்களைப் போட்டிருந்ததாலும் காலிறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

# பல்கேரியாவை வெற்றிகொண்டும் காலிறுதி வாய்ப்பை இழந்த இத்தாலி



'சி' பிரிவின் இன்னொரு லீக் போட்டியில் இத்தாலி - பல்கேரிய அணிகள் குயிமராஸ் நகரில் மோதின.

வலுவான இத்தாலி அணி இந்தப் போட்டியில் இலகுவாக வெற்றிபெறும் எனக் கருதப்பட்டது. சுமார் 30 ஆயிரம் ரசிகர்கள் இந்தப் போட்டியைக் காண அரங்கில் குவிந்திருந்தனர்.

போட்டி ஆரம்பித்த 13 ஆவது நிமிடத்தில் இத்தாலி அணி வீரர் டெல் பியரோ முதலா



வது கோலை அடித்து ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தினார்.

இதன்பின்னர் ஆட்டம் விறுவிறுபபடைய ஆரம்பித்தது. இத்தாலி அணியினர் கோல்களைப் போட்டுவிடத் துடித்தனர். ஆனால் முடியவில்லை.

இந்த நிலையில் யாரும் எதிர்பாராத வகையில் - முதற்பாதி ஆட்டம் முடிவடையும் நேரத்தில் 45 ஆவது நிமிடத்தில் பல்கேரியாவின் மாட்டின் பெற்றோவ் பனால்டி உதை மூலம் தனது அணிக்கு ஒரு கோலை அடித்தார்.

இதனால் முதல்பாதி ஆட்டம் சமநிலையுடன் முடிவுற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்தின் ஆரம்பமே அதிரடியாக இருந்தது. இத்தாலி அணி வீரர் பெரோட்டா 47 ஆவது நிமிடத்திலேயே ஒரு கோலை அடித்து தமது அணியின் வெற்றியை ஸ்திரப்படுத்தினார்.

இதன்பின்னர் விறுவிறுப்பாக இரு அணியினரும் விளையாடிய போதிலும், கோல் எதையும் போட முடியவில்லை. இதனால் இந்தப் போட்டியில் இத்தாலி அணி 2:1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.



இத்தாலி அணி இப்போட்டியில் வெற்றி பெற்றதன்மூலம் மொத்தம் 5 புள்ளிகளைப் பெற்றது. சுவீடன், டென்மார்க் அணிகளும் 5 புள்ளிகளைப் பெற்றன.

இதனால் இம்மூன்று அணிகளும் அடித்த கோல்களின் அடிப்படையில் காலிறுதிக்குச் செல்லும் அணிகள் தீர்மானிக்கப்பட்டன. இத்தாலி 3 கோல்களையே அடித்திருந்ததால் காலிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

காலிறுதிக்குள் நுழைந்த சுவீடன் 'டி' பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெறும் அணியுடன் 26 ஆம் திகதியும், டென்மார்க் 'டி' பிரிவிலிருந்து முதலாம் இடத்தைப் பெறும் அணியுடன் 27 ஆம் திகதியும் மோதவுள்ளன.




# மூன்று நாடுகள் கிரிக்கெட்; இன்று போட்டிகள் ஆரம்பம்!

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், நியூஸிலாந்து ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. ஜூலை 10 ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறும். தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன.

இதில் ஒவவொரு அணியும் மற்ற அணியுடன் தலா 3 முறை மோதவேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும். 3 நாடுகள் போட்டி விபரம் வருமாறு -

ஜூன் 24 இங்கிலா[illegible] - நியூஸிலாந்து, ஜூன் 26 மேறகிந்தியத் தீவுகள் - நியூஸிலாந்து, ஜூன் 27 இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள், ஜூன் 29 இங்கிலாந்து - நியூஸிலாந்து, ஜூலை 1 இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள், ஜூலை 3 நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள்

ஜூலை 4 இங்கிலாந்து - நியூஸிலாந்து, ஜூலை 6 இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள், ஜூலை 8 நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள், ஜூலை 10 இறுதிப்போட்டி.

## இங்கிலாந்து ரசிகர் பலி!

(லிஸ்பன்)

குரோஷிய ரசிகர் தாக்கியதில் இங்கிலாந்து உதைபந்தாட்ட ரசிகர் ஒருவர் பலியானார்.

போர்த்துக்கலில் நடைபெற்று வரும் யூரோ - 2004 உதைபந்தாட்ட சம்பியன் போட்டியில் இங்கிலாந்து- குரோஷிய அணிகளுக்கு இடையேயான போட்டியில் 4:2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றது.

இந்த நிலையில், லிஸ்பனில் நடைபெற்ற இந்தப் போட்டியின் முடிவில் குரோஷிய ரசிகர் ஒருவர் தாக்கியதில் 27 வயதான இங்கிலாந்து ரசிகர் ஒருவர் பலியானார். இந்தத் தகவலை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக போர்த்துக்கல் செய்தி நிறுவனமான லூசா வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து ரசிகரின் நெஞ்சில் பலமாக தாக்கப்பட்டதாகவும், இதனால் ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் - அங்கு அவர் உயிரிழந்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவத்திற்கு காரணமான குரோஷிய ரசிகர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## இம்ரான்கான் விவாகரத்து

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கான் காதலித்து மணந்த மனைவி ஜெமீமாவை விவாகரத்துச் செய்தார்.

இவர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் தற்போது அரசியலில் ஈடுபட்டுவருகிறார்.

இம்ரான்கான் 1995 ஆம் ஆண்டு லண்டனைச் சேர்ந்த ஜெமீமா என்ற பெண்ணைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார். இம்ரான்கான் - ஜெமீமா தம்பதியருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். மகிழ்ச்சியாகத் தொடங்கிய இவர்களது இல்லற வாழ்க்கை போகப்போக கசக்கத் தொடங்கியது. இதனால் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக சமீபகாலமாக இருவரும் தனித்தனியாக வசித்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். வலைப்பந்தாட்ட அணிகள் கொழும்புக்கு செல்கின்றன!

அகில இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படவுள்ள வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து இரு அணிகள் செல்லவுள்ளன.

எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் கொழும்பு ரொறிங்டன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்.மாவட்ட பெண்கள் வலைப்பந்தாட்ட அணியும், ஆண் - பெண் கலப்பு வலைப்பந்தாட்ட அணியும் செல்கின்றன.

நாளைமறுதினம் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லவுள்ள இந்த அணிகளுக்கு பொறுப்பாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் மைதிலி பூபாலசிங்கம், முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளருமான திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்கம் ஆகியோர் செல்லவுள்ளனர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு விளையாட்டு அமைச்சினால் பரிசில்கள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## அஸ்ரா கிண்ணப் போட்டி

# சிங்கள மகா வித்தியாலயத்தை கோணேஸ்வரா இந்து வென்றது

(திருகோணமலை)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 16 வயதிற்கு உட்பட்டோருக்கான போட்டியில் நேற்றுமுன்தினம் திருகோணமலையில் ஸ்ரீ கோணஸ்வரா இந்துக் கல்லூரி, சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தை 4 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிங்கள மத்திய மகா வித்தியாலய அணியினர் 90 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கேணேஸ்வரா இந்துக்கல்லூரி அணியினர் 8 விக்கெட் இழப்புக்கு 106 ஓட்டங்களைப் பெற்றனர்.

இரண்டாவது இனிங்ஸில் சிங்கள மத்திய மகா வித்தியாலய அணியினர் 93 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

பதிலுக்கு 78 என்ற ஓட்ட இலக்கை அடைவதற்காக களம் இறங்கிய கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியினர் 6 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தனர்.

(04)

# வலைப்பந்தாட்டப் போட்டியில் திக்கம் இளைஞர் கழகம் சம்பியன்

(வடமராட்சி)

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட மின்னொளியிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இறுதியாட்டத்திற்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின.

விளையாட்டுக்கள் சர்வதேச விதிப்படி ஒரு மணித்தியால ஆட்டமாக நான்கு பிரிவுகளைக் கொண்டு நடைபெற்றது.

முதலாவது கால் பிரிவில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் 12 கோல்களும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழம் 9 கோல்களும் போட்டன.

2 ஆவது அரைப்பிரிவில் திக்கம் விளையாட்டுக் கழகம் 10 கோல்களையும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 28 கோல்களையும் போட்டன.

3 ஆவது பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 14 கோல்களையும், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் 9 கோல்களையும் போட்டு இரு அணிகளும் 31 புள்ளிகளைப் பெற்ற நிலையில் இறுதிப் பிரிவு ஆட்டம் தொடங்கப்பட்டது.

இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் 14 கோல்களையும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 8 கோல்களையும் பெற்று திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

(12)

# நடனக்காட்சி என்ற பெயரில் கலாசாரத்தை சீரழிக்கும் நிகழ்வு

## திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெற்றதாம்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையிலுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடனக்காட்சி நிகழ்வு என்ற பேரியல் கலாசார சீரழிவு நிகழ்வு இடம்பெற்றதாக, பொது மக்கள் பலரும் விசனம் தெரிவித்தனர்.

"மூன்று நட்சத்திர நடனக்குழு" என்ற குழுவினரின் நடன நிகழ்வு இங்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வின் இறுதியில் தனியார் தொலைக்காட்சி ஒன்றினால் ஒளிபரப்பப்படும் "ஓ போடு" என்ற நிகழ்சியின் பாணியில் ஆண்களும் பெண்களும் இணைந்து ஆபாசமாக நடனமாடியதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தநிகழ்வில் யுவதிகள் ஆண்களுடைய ஆடைகளை அணிந்தவாறும், சில இளைஞர்கள் கைகளில் சிகரட்டுக்களுடனும் நடனமாடியதாக வயோதிபர் ஒருவர் வேதனையுடன் தெரிவித்தார்.

போற்றப்படவேண்டிய கலாசாரத்தை சீரழிக்கும் வகையில், சிலர் செயற்படுவது குறித்து எவரும் கண்டுகொள்வதில்லை என உயர் பதவியிலுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (லெ)

## சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் நெடுந்தீவில் கடமையை ஏற்கவில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குமென நியமிக்கப்பட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் நியமனம் பெற்ற காலத்தில் இருந்து, இன்றுவரைக்கும் நெடுந்தீவில் தனது கடமையினை மேற்கொள்ளாமையால், இது தொடர்பாக செயலக வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

கடந்த ஒருவருடத்துக்கு முன்பே இந்த உத்தியோகத்தர் யாழ. பிரதேச செயலகத்தில் நிரத்தரமாகவும், ஏனைய தீவகபிரதேச செயலகங்களுக்குப் பதிலாகவும் நியமனம் வழங்கப்பட்டபோதும், இந்த அலுவலர் இது வரைக்கும் தனது பணியினை நெடுந்தீவு பிரதேச செயலகப்பிரிவில் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (113)

### வைரஸ் காய்ச்சலால் கல்வியியற் கல்லூரி மூடப்பட்டது

இரத்தினபுரி றுவான்புர கல்வியியற் கல்லூரியில் ஒருவித வைரஸ் காய்ச்சல் பரவியதையடுத்து, அந்தக் கல்லூரி எதிர்வரும் 2ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்த றுவான்புர தேசிய கல்வியியற் கல்லூரியில் தற்போது 260 மாணவர்கள் கலவி பயிலுகின்றனர். இந்த கல்வியற் கல்லூரியின் விடுதியிலுள்ள சில மாணவருக்கு வைரஸ் காய்ச்சல் பரவியதன் காரணமாக மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, கல்வி அமைச்சின் ஆலோசனைப்படி நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரை, கல்வியற் கல்லூரி மூடப்பட்டு இருக்கும் என பீடாதிபதி தெரிவித்தார்,

# கஜேந்திரகுமார் எம்.பி. நெடுந்தீவுக்கு விஜயம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் நெடுந்தீவுக்கு சென்று, அங்குள்ள நிலமைகளை நேரில் பார்வையிட்டனர்.

புங்குடுதீவு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இறுப்பிட்டி சித்தி விநாயகர் பாடசாலை, புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை, குறிகட்டுவான் இறங்குதுறை ஆகிய இடங்களுக்குச்சென்று அங்குள்ள குறைபாடுகள் குறித்து பல்வேறு தரப்பினரையும் கேட்டறிந்தனர்.

இதன்போது குறிகட்டுவான் இறங்குதுறையின் கரையோரப் பகுதிகள் சேதமடைந்த நிலையில் இருப்பதாகவும், புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வைத்தியசாலையில் பணியை பொறுப்பேற்க வைத்தியர் முன்வரவில்லை என்றும், இதனால் அங்குள்ள மக்கள் சிரமங்களுக்கு மத்தியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருவதாகவும் அங்குள்ள மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

இதேவேளை இறுப்பிட்டி வீதிகள் சேதமடைந்திருப்பதுடன், குடிதண்ணீர் மற்றும் போக்குவரத்து போன்றவற்றுக்கு அங்குள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

### கரவெட்டிக்கு உதவிப் பிரதேச செயலர் நியமனம்

வவுனியா தமிழ்ப் பிரிவு உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய எஸ். சத்தியசீலன் தற்போது கரவெட்டி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராக நியமிக்கப் பட்டார்.

இதேவேளை, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.கனகரட்ணம் தொடர்ந்தும் பிரதேச செயலாளராகவே கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்.

# வீதி விபத்துக்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் கலந்துரையாடல்

யாழ். குடாநாட்டில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை அடுத்து யாழ். மாவட்ட நீதிமன்றின் ஏற்பாட்டில் வீதி விபத்துத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மாவட்ட நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதன் காரணம், மற்றும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (லெ)

# சமிக்ஞைகளற்ற வாகனங்களை செலுத்துவதால் குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளது

## மோட்டார் வாகன பரிசோதகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்திலீடுபடும் பல வாகனங்கள் தேவையான ஒளிச் சமிக்ஞைகள் முன்பக்கக் கண்ணாடிகள் முதலானவற்றைக் கொண்டிருப்பதில்லை என யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள விபத்துக்கள் மற்றும் அவற்றிற்கான காரணங்கள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது -

யாழ்ப்பாணத்தில் தற்போது வாகனங்களின் பயன்பாடு 2001ஆம் ஆண்டு இருந்ததிலும் பார்க்கப் பன்மடங்காக அதிகரித்திருக்கிறது. இந்த அதிகரிப்பினாலும் வாகன நெரிசல் காரணமாக விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதனைவிட வாகனங்கள் பல தேவையான ஒளிச் சமிக்ஞைகள் மற்றும் கண்ணாடிகள் முதலாவற்றைக் கொண்டிருப்பதில்லை. அத்தோடு, இளைஞர்கள், சாரதி அனுமதிப்பத்திரம் பெறாத, சாரதிக்குரிய ஒழுங்குவிதிகள் பற்றி அறியாதோர் ஆகியோர் வாகனம் செலுத்துவதும் இந்த விபத்துக்களுக்குக் காரணமாகின்றன.

இந்தவிடயங்களில் பொலிஸாரை உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளோம். அவர்கள் சரியான முறையில் தனது கடமைகளை மேற்கொள்வார்களெனில் விபத்துக்களைத் தடுக்க முடியும் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

வாகனங்களைக் கொள்வனவு செய்யும்போது, நம்பத்தகுந்த அரச அங்கீகாரம்பெற்ற முகவர் நிறுவனங்களிடமிருந்து வாகனங்களைக் கொள்வனவு செய்தால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பல சிரமங்களைத் தவிர்க்க முடியும்.

பல வாகனங்கள் சரியான பதிவுகளைக் கொ்ண்டிருக்காமை அண்மைக்காலங்களில் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதனை இதற்குச் சன்றாகக் கூறமுடியும் என்றார். (ப)

### சர்வதேச கூட்டுறவு தினம்

(வடமராட்சி)

சர்வதேச கூட்டுறவு தினத்தை யாழ். மாவட்டத்தில் மிக சிறப்பாக கொண்டாடுவதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவு சபை ஏற்பாடுகளை செய்து வருகிறது.

82ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி கொண்டாடுவதற்கு யாழ். கூட்டுறவு சபை தீர்மானித்துள்ளது. இந்த விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான போட்டிகளை நடாத்தவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# நெடுந்தீவு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவித்தொகை வழங்கத் தீர்மானம்

நெடுந்தீவில் இயங்கி வருகின்ற முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, மாதாந்தம் உதவித் தொகை ஒன்றை நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம் ஊடாக வழங்க வேண்டுமென பொதுச்சங்க உறுப்பினர்களால் விடப்பட்ட கோரிக்கை நிர்வாகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரைக்கும் மாதாந்தம் 300 ரூபாவை வழங்குவதெனவும், சங்கத்தின் வளர்ச்சியையும், நிதிவளத்தையும் பொறுத்து, அடுத்தவருடம் முதல் இந்தத் தொகையை 500ரூபாவாக உயர்த்தி வழங்கமுடியும் எனவும், நெடுந்தீவு பல.நோ.கூ.சங்க பொதுச் சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டதாக சங்கத்தலைவர் சு.கோபாலசிங்கம் தெரிவித்தார். (113)

## 1974க்குப் பின்னரான போர்க்காலங்களில்

# படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரங்கள் கிராம அலுவலர்களால் திரட்டப்படுகின்றன

போர்க் காலங்களில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமற் போன பொது மக்களின் விபரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சேகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த விபரங்களை சேகரிப்பதில் கிராம அலுவலர்களின் அனுசரணையுடன் ஊரக தேசிய எழுச்சிப் பேரவையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

1974ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளின் போது, அரச படைகளினாலும், இந்திய அமைதிப்படை மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்களினாலும், படுகொலை செய்யப்பட்டும் கைது செய்யப்பட்டு, பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பான விபரங்களுமே இவ்வாறு சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சேகரிக்கப்படும் விபரங்கள் அனைத்தும் படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமற் போனவரின் நெருங்கிய உறவினர்கள் மூலமாகப் பெறப்பட்டு, அவை சமாதான நீதிவான் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டு, சத்தியக்கடதாசிகளாக ஆவணப்படுத்தப்படவுள்ளன.

இந்த ஆவணப்படுத்தலின் மூலம், சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலைகள் தொடர்பாக -விபரங்களை வெளிப்படுத்த முடியுமெனவும் அதன் மூலமாக சமாதான நகர்வுகளை நிலையானதாக மாற்றமுடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக திரட்டப்படும் இந்த விபரங்களை சம்பந்தப்பட்டவர்கள் தமது ஊரக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர்களுடன் தொடர்புகொண்டு, எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. போரின் மூலம் உயிர் இழப்புக்களை சந்தித்த குடும்பங்களின் விபரங்களை திரட்டுவதன் மூலமாக உதவிப் பணிகளை மேற்கொள்வதும் இலகுவானதாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (94)

# வவுனியாவளாக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதித்தனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வவுனியாவளாக மாணவர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, நிர்வாகம் இழுத்தடித்து வருவதற்கு ஆட்சேபித்து நேற்று முன்தினம் முதல் வகுப்புக்களை பகிஷ்கரிப்பில் ஈடுபடுத்தினர்.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களுக்கான விளையாட்டு மைதானம், நிரந்தர காணிகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், ஏனைய பல்கலைக்கழகங்களில் நடைமுறையில் இருப்பது போன்று விடுதிகளுக்கான கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்றும் கோரி, கடந்த மாதம் வகுப்புக்களை பகிஷ்கரிப்பில் ஈடுபடுத்தினர்.

இவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நிர்வாகம் ஏற்றுக்கொண்டதை அடுத்து இந்த மாதம் 20ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

எனினும், இதுவரை நிர்வாகம் வாக்குறுதியளித்தபடி தமது கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வராதமையை அடுத்தே வகுப்புக்களை பகிஷ்கரித்ததாக மாணவர்கள் தெரிவித்தனர். (03)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



நான்காவது அகவையில்



பெயர் : சி.தவரூபன்
முகவரி : வளலாய், அச்சுவேலி.

எட்டாவது அகவையில்



பெயர் : க. சோபிகா
முகவரி : நாகர்கோவில், மேற்கு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன

பெற்றோர் ஒப்பம்




# காளான் வளர்ப்புத் தொழில்



இந்தத் தொழிலைப் பொறுத்தவரை கிராமங்களிலும், நகரங்களிலும் செய்யக்கூடிய தொழிலாகும். ஒருவரே இந்தத் தொழிலை மேற்கொள்ளலாம். சிறிய அளவிலான முயற்சியுடனும், சிறிய தொகை முதலீட்டுடனும் காளான் வளர்ப்பை மேற்கொள்ளலாம்.

இதன்மூலம் கிடைக்கும் வருமானம் மிக உயர்ந்ததாகும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையும் இந்தக்காளான் வளர்ப்பிலுள்ள சிறப்பம்சமாகும்.

இந்தக் காளான் - தாவர உணவு வகையைச் சார்ந்தது. புரதச்சத்து நிறைந்த உணவாகும். இந்தக் காளான் வளர்ப்புக்குத் தேவையான மூலப்பொருட்கள் வைக்கோல், காளான் விதை மற்றும் மருந்து வகைகள். இதற்குரிய தொழில்நுட்பம் மிகவும் இலகுவானது.

நீர் ஊற்றப்பட்ட வைக்கோலை அவித்தபின், மரச்சட்டமொன்றின் உதவியுடன் அதனை களிமண் படையில் வைப்பதன்மூலம் படுகையொன்று தயாரிக்கப்படவேண்டும். படுகைகள் தயார் செய்யப்பட்டு, பின்னர் பாத்திகளுக்கு நீரூற்றி அதன் மீது, காளான் விதைகள் பரப்பப்படவேண்டும். நேரடி ஒளியைக் குறைப்பதற்குப் பிளாஸ்ரிக் உறை கொண்டு பாத்தியை மூடிவைத்தல் வேண்டும். அல்லது கிடுகினாலான 10'x10' பரப்பளவு கொண்ட சிறு கொட்டிலில் இடப்படவேண்டும். பாத்தி ஒன்றின் நீள, அகலம் முறையே 3:2 அடிகளாகும்.

ஒருவாரத்துக்கும், இரண்டு வாரத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் அறுவடை செய்யலாம். பாத்தி ஒன்றிலிருந்து 750 கிராம் காளான் அறுவடை செய்யக் கூடியதாக இருக்கும்.

சந்தைவாய்ப்பைப் பொறுத்து, படிப்படியாகக் காளான் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளலாம். சுயதொழிலாக ஆரம்பிக்க விரும்பாதவர்கள்கூட இந்தக் காளான் வளர்ப்பை வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தத் தொழில்மூலம் தினசரி வருவாயைப் பெறமுடியும். உழைப்புக்கேற்ப ஊதியம் என்பதைவிட வியாபாரத் திறமைக்கேற்ப கணிசமான இலாபத்தை அடையமுடியும்.

# பொருளாதார அணுகு முறைகளில் உற்பத்தித் திறனுக்குள்ள முக்கியத்துவம்



இன்று பல்வேறு நாடுகளிலும், பல்வேறு மட்டங்களிலும் உற்பத்தித்திறன் பற்றிப் பேசப்படுகின்றது. அதற்கு காரணம், அபிவிருத்தி அடைந்த நாடுகளின் முன்னேற்றத்தில் உற்பத்தித்திறன் என்ற விடயம் செல்வாக்குச் செலுத்தி இருப்பதாகும். இதனால், பலநாடுகள் பொருளாதார அணுகு முறைகளில் உற்பத்திதிறனுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

உற்பத்தி என்பது உற்பத்தித் திறனில் இருந்து வேறுபடுகின்றது. இதில் உற்பத்தி என்பது பொருள் சேவையின் வெளியீட்டைக் குறிப்பதாகும்.

ஆனால், உற்பத்தித்திறன் என்பது மேற்கொள்ளும் ஒவ்வொரு தொழிலையும், சேவையையும் சிறப்பாக ஆற்றுவதைக் குறிப்பதாகும்.

இதேநேரம் உற்பத்தி நடைபெறும் எல்லா இடங்களிலும் உற்பத்தித்திறன் இருக்கவேண்டும் என்பதில்லை. ஆனால், உற்பத்தியாளர்களும், பணியாளர்களும் வினைத்திறனுடன் செயலாற்றுவதினூடாக மேலதிக உற்பத்தியைப் பெறமுடியும்.

நிறுவனங்கள் அல்லது தொழிற்சாலைகள் உற்பத்தித்திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விடும்போது, பின்வரும் பிரதிகூலங்கள் ஏற்படுகிறது.

☛ பல்வேறு வேலைகள் தாமதம் அடைதல்.

☛ உரிய நேரத்தில் சேவைகள் கிடைக்காமல் போதல்.

☛ நோக்கம் தாமதமடைந்து இலாபம் குறைதல்.

பொதுவாக, உற்பத்தித்திறன் பற்றிய கருத்தினை நிறுவனத்தின் உயர்மட்டத்தினுள்ளோர் மட்டும் கவனத்தில் எடுத்தால் சரி - என்ற நிலையே காணப்படுகிறது.

ஆனால், உற்பத்தித்திறன் நடவடிக்கைகள் ஒவ்வொரு தனிப்பட்ட பணியாளர்களின் செயல்களிலிருந்தே ஆரம்பிக்கிறது. நிறுவனத்திலுள்ள சகலரும் இதற்குப் பொறுப்பானவர்கள். இது பணியாளர்களிடம் அதிகம் வேலை வாங்குவதோ, ஆட்குறைப்புடன் சம்பந்தப்பட்டதோ அல்லது அதிகம் வேலை செய்வதை ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடோ அல்ல உற்பத்தித் திறன் உறுதியான வேலையை ஊக்குவிப்பதாகும்.

பல்வேறு தொழிலாளர்களை அவதானித்தால், அவர்களுடைய கல்வித்தரம் தொழிற்திறன் என்பன ஓரேதரமாக இருப்பினும், அவர்களுடைய உற்பத்தித்திறன், மனோபாவம், என்பவற்றுள் பல முரண்பாடுகள் காணப்படுகிறது.

உற்பத்தி வளங்களுள் மனிதவளத்தை முகாமை செய்தல் என்பது கடினமான பணியாகும். ஏனெனில், மனித விருப்பங்கள் எண்ணங்களை அறிந்துகொள்வது கடினமானதாகும். இதனால் தொழிலாளர்களின் மனோநிலையை அறிந்து, ஊக்குவித்தல்மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும்.

உற்பத்தித்திறன் எப்போதும் நேரத்தை மீதப்படுத்துவதாக அமையவேண்டும். பல்வேறு வேலைகளையும் ஒரே தடவையில் செய்யக்கூடியதாக அல்லது கண்காணிக்கக் கூடியதான திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

பின்வரும் வழிமுறைகளைப் பயன்படுத்துவதன்மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும்.

✷ விரயங்களைக் குறைத்தல்.

✷ ஒரு பொருளுக்கு அல்லது சேவைக்கு மேலதிகப் பெறுமதியை அளித்தல்.

✷ நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றுதல்.

✷ தரத்தைப் பேணுதல்.

✷ இயந்திரம், தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் இருப்பு என்பவற்றை உரிய முறையில் தேவைக்கேற்ற படியும் பயன்படுத்துதல்.

✷ மனோநிலை மாற்றத்தை ஏற்படுத்துதல்.

✷ பணியாளர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தல்.

✷ ஒவ்வொரு வேலையிலும் ஒரு நோக்கம் இருப்பதை உறுதிப்படுத்தல்.

✷ எப்போதும் செலவைக் குறைக்கும் வழியில் மட்டும் செயற்படாதிருந்தால், இந்த வகையில் தரத்தை முன்னேற்றும் வழியில் செயற்பட வேண்டும்.

✷ நல்ல சுற்றாடலை உருவாக்குதல்.

இன்று உற்பத்தித்திறன் பற்றிப் பேசும் போது தரம், தொழில்நுட்பம், நிறுவன அமைப்பு, நிறுவனக் கலாசாரம், மாறிவரும் பொருளாதார சூழ்நிலை, முகாமைக் கண்ணோட்டங்களில் மாற்றம் என்பன பற்றியெல்லாம் கவனத்திலெடுக்க வேண்டியுள்ளது. ✪

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலை செங்கலடி. | **விஞ்ஞான பீடம்**<br>1. கணிதவியல் துறை<br>✯ தற்காலக உதவி விரிவுரையாளர் கணினி விஞ்ஞானம்.<br>✯ தற்காலிக உதவி விரிவுரையாளர் புள்ளிவிபரவியல்.<br>✯ தற்காலிக போதனாசிரியர் புளளிவிபரவியல்.<br>02. இரசாயனவியல் துறை<br>✯ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் (தகுதிகாண்) இரசாயனவியல்.<br>✯ தற்காலிக உதவி விரிவுரையாளர் இரசாயனவியல்.<br>03. பௌதீகவியல் துறை<br>✯ தற்காலிக உதவி விரிவுரையாளர் - பௌதீகவியல்<br>**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம்**<br>✯ விரிவுரையாளர் (தகுதிகாண்) கணினி, விஞ்ஞானம்.<br>✯ அறிவுறுத்துநர் கணினி தொழில்நுட்பம்<br>**கலை கலாசாரபீடம்**<br>சுவாமி விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி<br>✯ சங்கீதம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் (தகுதிகாண்) தற்காலிக உதவி விரிவுரையாளர்.<br>✯ நடனம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் (தகுதிகாண்) தற்காலிக உதவி விரிவுரையாளர்.<br>✯ தமிழ்<br>விரிவுரையாளர் (தகுதிகாண்)<br>**நூலகம**<br>உதவி நூலகர் தரம் II வயதெல்லை 45 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். | துறைசார்ந்த பட்டதாரிகள் | 12.07.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# சந்தை வாய்ப்பு அதிகமுள்ள அன்னாசிச் செய்கை

அன்னாசி கொமொசஸ் என்ற தாவரவியற் பெயரால் அழைக்கப்படுகின்றது. அன்னாசி மிகப் பிரபல்யமான பழமாகும். ப்ரோமியு லேசி இனத்தைச் சேர்ந்த இந்த அன்னாசி பிரேசிலில் முதன்முதலாக உற்பத்தி செய்ததாகத் தெரிய வருகின்றது. உலகில் வெவ்வேறு நாடுகளில் அன்னாசி உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. பழமாக சுவையூட்டப் பட்டும், ரின்களில் அடைக்கப்பட்டும், பழச்சாறாகவும், ஜாமாகவும் அன்னாசி பயன்படுத்தப்படுகின்றது.

100 கிராம் அன்னாசிப் பழத்தில் 88 நீரும், 0.4 புரதமும், 0.1 எண்ணெய்ச்சத்தும், 10.8 மாச்சத்தும் மற்றும் கல்சியம், இரும்புச்சத்து, பொஸ் பரஸ், தயமின்,ரைபோசி பிலேவின், நியசின், விட்டமின் சி ஆகியவை இதில் அடங்கியுள்ளது.

அன்னாசியில் மருத்துவத் தன்மையும் உள்ளது. காய்களிலும் மற்றும் இலைகளின் சாற்றிலும் கிருமிநாசினித் தன்மை உள்ளது. இந்தச் சாற்றினை உபயோகித்தால், சிக்கலை நிறுத்திக்கொள்ளலாம். அதேபோல், முற்றாத காய்களின் சாற்றில் அடங்கியுள்ள விஷத்தினால் வயிறு சம்மந்தமான நோய்களும், கருவழிவு போன்றவையேற்படும். பிஞ்சுக் காய்களை இவ்வாறு பிரயோகப்படுத்தினால், பழுத்த காய்களின் சாற்றை மஞ்சள் காமாலை மற்றும் வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பாவிக்கலாம்.

வருடத்துக்கு 1200 - 3000 மில்லிமீற்றர் மழையுடன் 26-35 சென்றிகிரேட் உஷ்ணமுள்ள பிரதேசங்களில் சிறப்பாக உற்பத்திகளை மேற்கொள்ளலாம். இதன்படி தாழ்ந்த ஈரவலயப் பிரதேசங்களான கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களிலும் தாழ்ந்த வலயமான குருணாகல், மொனறாகலை, புத்தளம், அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும், மகாவலி வலயத்திலும் நன்றாக அன்னாசி உற்பத்தி செய்வதோடு, உலர் வலயப்பிரதேசங்களிலும் சிறந்த உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றன. இதைவிட றப்பர், மற்றும் தென்னை உற்பத்தி செய்யும் பிரதேசங்களிலும் இதை உற்பத்தி செய்யலாம்.

நன்றாக நீரை உறிஞ்சிக் கொள்ளும் மணலோடு சேர்ந்த மண் உற்பத்திக்குத் தகுந்ததாகும். மண்ணில் ph அளவு 5 - 6 இற்கிடையில் இருந்தால், மிகவும் நன்று. மேலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அன்னாசி, இரு வகைப்படும். அவையாவன - முரிசி மற்றும் கீவி ஆகும்.

### முரிசி வகை

இது இலைகளின் முட்களைக் கொண்ட, மத்திய அளவு உயரமுடைய மரமாகும். அன்னாசிக் கால் கூம்புபோல்



இருக்கும். தோலின் ஆழத்தில் காணப்படும் 'கண்கள்' தெளிவாக வெளியில் இருப்பதைக் காணலாம். நன்றாகப் பழுத்த பின்பு பழங்களில் இருந்து நல்லதொரு வாசம் வரும். இனிப்புத் தன்மை அதிகமாக இருக்கும்.

### கீவி

முரிசி மரத்தைவிட கீவி மரம் பெரிதாகக் காணப்படும். இவற்றின் பழங்கள் உருண்டையாக இருக்கும். இது முட்கள் இல்லாத இலைகளைக் கொண்டது. இதன் தோளிலுள்ள கண்கள் பெரிதாகவும், தட்டையாகவும் காணப்படும். இவற்றின் பழங்கள் புளித்தன்மை அதிகமானவை. அதேபோல் நிலத்தில் நடுவதற்காக கன்றுகள் எடுக்கப்படும். அவை வகையாக பிரிக்கப்படும்.

**நிலத்தை ஒழுங்கு செய்தலும் மற்றும் கன்றுகள் பயிரிடுதல்**

ஏனைய உற்பத்திகளைப் போலவே இதற்கும் மண்ணைப் புரட்டி, தடுத்தபடி நிலத்தை ஒழுங்குசெய்து கொள்ள வேண்டும். 10 செ.மீ ஆழமும், மற்றும் 20 செ.மீ அகலமும் கொண்ட வாய்க்கால்களை அமைக்கவேண்டும். பள்ளமான காணி என்றால் வாய்க்காலை குறுக்கு பக்கமாக போட வேண்டும். சமநிலை



யான காணி என்றால், கிழக்கு - மேற்குத் திசைகளை நோக்கி வாய்க்கால் வெட்டுவது மிக உகந்தது. தயாரிக்கப்பட்ட வாய்க்காலில் கன்றுகளை நேராக இருக்கும்படி பயிரிட்டால் நன்றாக வளரும்.

வாய்க்காலுக்கு மேலுள்ள மண்ணைச் சுரண்டி கன்றுகளின் அடியிலிருந்து 10 - 15 செ.மீ அளவு கன்றை மூடும்படி வரிசையாக்கலாம். அன்னாசி தனி வரிசையாகவும் அல்லது இரு வரிசையாகவும் பயிரிடலாம். அதற்கு ஏற்றவாறு கன்றுகளின் தேவைகள் வித்தியாசமாகும்.

**தனிவரிசை உற்பத்தித்திட்டம்.**

| வரிசைகளில் இருக்கும் கன்றுகளுக் கிடையிலுள்ள தூரம் | ஒரு ஏக்கருக்குத் தேவையான கன்றுகள் | பயிரைப் பொருளாதார மாகச் செய்யக் கூடிய காலம். |
|---|---|---|
| 30 செ.மீ | 6500 | 06 |
| 40 செ.மீ | 5000 | 07 |
| 50 செ.மீ | 400 | 08 |

**இரு வரிசை உற்பத்தித் திட்டம்.**

இருவரிசை திட்டத்தின் பிரகாரம் இரு வரிசைக்குள் உள்ள இடைவெளி 60 செ.மீ ஆகும்.

| வரிசைகளில் இருக்கும் கன்றுகளுக் கிடையிலுள்ள இடைவெளியின் தூரம் | இரு வரிசைக்கு இடையிலுள்ள தூரம் | ஒரு ஏக்கருக்குத் தேவையான கன்றுகள் | பயிரைப் பொருளாதார மாகச் செய்யக் கூடிய காலம். |
|---|---|---|---|
| 30 செ.மீ | 01 மீ | 16500 | 04 |
| 30 செ.மீ | 25 மீ | 14000 | 05 |
| 50 செ.மீ | 01 மீ | 10000 | 06 |
| 50 செ.மீ | 150 மீ | 7500 | 07 |

### உரம் பாவித்தலும், நீர் விநியோகமும்

யூரியா றொக், பொஸ்பேட் மற்றும் மியூரியெட் ஒவ் பொட்டேஸ் உபயோகித்து, தயாரித்துக் கொள்ளும் என்.பி.கே- 11:17:31 கலவை அன்னாசி உற்பத்திக்கு உகந்ததாகும்.

24 கிலோகிராம் யூரியாவும், 25 கிலோகிராம் பொஸ்பேற்றும், 5 கிலோகிராம் மியூரியெட் ஒவ் பொட்டேஸும் கலந்து 100 கிலோகிராம் கலவையை தயாரிக்கலாம். பயிரிட்டு ஒரு மாதத்துக்குப் பின்பு மேற்குறிப்பிட்ட கலவையின் 28 கிராமை ஒரு கன்றுக்குப் போடவேண்டும்.

பின்பு சகல 3-4 மாதங்களுக்கு ஒரு தடவை, மேல் குறிப்பிட்டளவு உரத்தைப் போடவேண்டும். அன்னாசி உற்பத்திக்கென விசேடமான உரம் பயன்படுத்துவதில்லை. படிப்படியாக உரம் போடப்பட்ட அன்னாசியின் வளர்ச்சி குறைவாகவும், இலைகளின் நிறம் வித்தியாசமாகவும் இருந்தால், சிறிதளவு மூலகங்கள் அடங்கிய உரத்தைப்போடவேண்டும்.

விசேட நீர்விநியோகம் இல்லாவிட்டாலும் வரண்ட காலத்தில் மாதத்துக்கு 4-6 தடவை நீர் விநியோகிப்பதனால், நல்ல ஆதாயத்தைத் தரும் விளைச்சலைத் பெறலாம். மண்ணில் ஈரத்தன்மையை பாதுகாத்துக்கொள்வதற்காக 20 செ.மீ - 30 செ.மீ போன்ற உயரத்துக்கு தும்புகளோ அல்லது வேறு தகுந்த எவற்றையாவது பாவித்து, கன்றுகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

களைகள் வளராமல் தடுக்கவேண்டும். மண்வெட்டியாலேயோ அல்லது இரசாயனக் களை நாசினிகளை உபயோகித்து, களைகள் வளராமல் தடுக்க வேண்டும். தும்புகளைப் போடுவதனால் களைகள் வளராமல் தடுத்துக்கொள்ளலாம். களை நாசினிகளைப் பயன்படுத்துவதனால், அன்னாசிக்கு எந்தவித பாவிப்பும் ஏற்படுவதில்லை.

### நோய்களும் மற்றும் கிருமிகளின் பாதிப்பும்

அன்னாசியைப் பாதிக்கும் பிரதான நோய்களாக செடியின் வேர்கள் அழுகுதல், காய்கள் அழுகுதல் மற்றும் செடிகள் வாடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த நோய்களை வராமல் தடுப்பதற்காக இரசாயனங்களை உபயோகித்துக்கொள்ளலாம். பிரதானமாகப் பாதிப்பை ஏற்படுத்தும் கிருமியாக அன்னாசி மாவண்டைக் குறிப்பிடலாம். மாவண்டு பிரதானமாக அன்னாசி உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுத்துவதோடு, அன்னாசிச் செடியை வாட வைத்து அதன் சாற்றையும் உறிஞ்சிக் குடிக்கும். அதேபோல் காய்களைப் பெருப்பிப்பதற்கு பின் வரும் முறையைப் பயன்படுத்தலாம்.

எல்பா நெப்தலீன் அசிற்றிக் அசிற் அடங்கிய இரசாயனங்களையோ அல்லது எனிவ்பொன்னை நீரில் கலப்பதனால், தயாரிக்கப்பட்ட திரவத்தில் லீற்றர் ஒன்றுக்கு 2 கிராம் யூரியாவைக் கலந்து, பூப்பூத்து ஒரு மாதத்துக்கு பின்பு காயகளுக்குத் தெளிப்பதனால் காய்களைப் பெரிதாக்கிக்கொள்ளலாம்.

### விளைச்சலைப் பெறுதல்

தகுந்தளவு முற்றிய காய்களை மட்டும் தெரிவு செய்து பிடுங்கிக்கொள்ளவேண்டும். காயின் மேல் தோலிலுள்ள "கண்" நன்றாக விரிந்து, முழுமையடைந்த காய்களை முற்றிய காய்கள் எனக் கூறலாம். வெளித்தோலின் நிறம் 50 வீதம் மஞ்சள் நிறமாக மாறிய பின்பு விளைச்சலைப் பெறலாம். காம்பின் நீளம் 4-5 அங்குலமாக இருக்குமாறு உடைத்துக்கொள்ளவேண்டும். அதிகாலையில் விளைச்சலைப் பெற்றுக்கொள்வது நல்லது. பின் பிடுங்கிக்கொண்ட காய்களை நசியாதபடி நிழல் உள்ள இடத்தில் காம்பு மேற்பக்கம் நிற்கும்படி களஞ்சியப்படுத்தவேண்டும்.

மழையிலும், அதிக வெயிலும் இருந்து காய்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

பிடுங்கிக்கொண்ட காய்களை இருவாரம் பழுதாகாமல் வைத்துக்கொள்ளலாம். நன்றாக உற்பத்தியை மேற்கொண்டால், 5-6 வருடங்களுக்கு மேல் பொருளாதார இலாபமாக மட்டத்தில் அன்னாசியை வைத்துக்கொள்ளலாம்.

தனி உற்பத்தியாக மட்டுமல்ல, தென்னை மற்றும் றப்பர் காணிகளிலும் இடை உற்பத்தியாகவும் பயிரிடமுடிவதாக விவசாயிகள் இது சம்மந்தமாக அதிகளவு அவதானத்தைச் செலுத்துவது மிக நல்லது.

அன்னாசியை ஜாம் உற்பத்திக்கும் பயன்படுத்த முடிவதோடு, சிறுகைத் தொழில் செய்யும் மக்களும் தங்களுடைய வீட்டுக்காணிகளில் அன்னாசி உற்பத்தி செய்து நல்லதொரு வருமானத்தைப் பெறலாம். அதேபோல், விவசாயம் செய்யாமல் விடுபட்ட காணிகளில் அன்னாசி உற்பத்தி செய்து நல்ல பலனைப் பெறலாம்.

சசி சந்திரகாசன்

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சங்கானை | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 50/= | 50/= | 70/= | 60/= | 60/= | 50/= | 60/= |
| வெண்டிக்காய் | 20/= | 25/= | 40/= | 25/= | 40/= | 20/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 60/= | 70/= | 70/= | 80/= | 75/= | 70/ |
| கத்தரிக்காய் | 60/= | 50/= | 60/= | 50/= | 40/= | 50/= | 50/= |
| பாகற்காய் | 80/= | 70/= | 80/= | 70/= | 60/= | 60/= | 60/= |
| கரட் | 80/= | 70/= | 90/= | 60/= | 80/= | 50/= | 60/= |
| பீற்றூட் | 20/= | 40/= | 40/= | 40/= | 40/= | 40/= | 45/= |
| முருங்கக்காய் | 180/= | 100/= | 150/= | 160/= | 120/= | 140/= | 100/= |
| வெங்காயம் | 50/= | 40/= | 60/= | 35/= | 60/= | 40/= | 60/= |
| பச்சை மிளகாய் | 35/= | 35/= | 35/= | 25/= | 40/= | 35/= | 40/= |

பாலசுப்பிரமணியம் தனபாலன்

# மொழிவாண்மை விருத்தியில் செயல் நிலை ஆய்வுகள்

பாடசாலைகளில் கல்வியில், வினைத்திறன்களை உயர்த்த மாணவர்களின் மொழி, கற்றல் பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்து தீர்வுகாண, ஆசிரியர்கள் தமது மொழி வாண்மையை விருத்தி செய்ய, செயல் நிலை ஆய்வுகள் வழி காட்டுகின்றன.

ஒவ்வொரு ஆரம்பக்கல்வி ஆசிரியரும் தம் வகுப்பறையில் எழும் கல்வியியல், மொழியியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு



காணும் வகையில், எளிமையான நடைமுறை பயனுள்ள ஆய்வுகளைச் செயற்படுத்துதலே செயல் நிலை ஆய்வுகள் எனலாம்.

செயல் நிலை ஆய்வில், ஆய்வும்-செயலும் ஒன்றிணைக்கப்படுகின்றன. ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பாடசாலைக் கல்வி முறைமையில் மிகமுக்கிய வளங்களாகவுள்ளனர். இவர்கள் சிறந்த தரமான கல்வியை வழங்குவதற்கு, தமது மொழியியல் வாண்மையை உயர்த்துவதற்கு, கல்வியியல் ஆய்வுத் துறைகளில் வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும்.

இதற்கான வசதிகளையும், வளங்களையும் இலங்கையில் முறைமைப்படுத்தும் செயற்றிட்டங்கள் போதுமானவையாக இல்லை. ஆசிரியர்களின் சுயாதீன செயல்வலு குறைவடைந்து, மேல்நிலை அதிகாரங்களைச் செயற்படுத்துவோராகத் தேர்ச்சியுள்ள மாணவர்களை உருவாக்கும் நிலையிலிருந்து, தேர்ச்சியுள்ள மாணவர்களைக் கண்டறியும் உத்தியோகத்தர்களாக மாறிவருகின்றனர்.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தமது மொழித்திறன் வாண்மையையும், அரம்பக்கல்வி மாணவர்களின் மொழிவிருத்தியையும் சிறப்பாக மேற்கொள்ள, நடைமுறைப் பயனுள்ள மொழி விருத்தி செயன்நிலை ஆய்வுகளின் தேவை மிக அவசியமாகவுள்ளது.

ஆரம்பக்கல்வி பாடசாலை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் மொழி - கல்வியியல் செயல் நிலை ஆய்வுகளின் நோக்கம், யாவருக்கும் எல்லாக்கல்வி நிலைகளிலும் பயன்படும் பொதுக் கோட்பாடுகளை உருவாக்குவதன்று.

உடனடிப்பயன், மேம்பாடு, தொடர்பாடல் விருத்தி, மொழிக் கல்வி உள்ளீடுகளுக்குரிய வெளியீடுகளின் முன்னேற்றம் என பவையே முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன. ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒரு ஆய்வாளர் என்ற பாத்திர அமைப்பு - மொழி கற்பித்தல் பயிற்சிக்கும், அபிவிருத்திக்கும் அவசியமானது. இவ்வகையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் தன் மொழிவாண்மையையும், மாணவர்களின் மொழியாற்றலையும் விருத்தியாக்க, இது தொடர்பான செயல் நிலை ஆய்வுகளில் ஈடுபடல் இன்றைய உலகக் கல்விச் செல் நெறியாக உள்ளது.

மேலும், ஆசிரியர் ஒருவர் எந்த ஒரு பாடத்தையும் வினைத்திறனுடன் கற்பிக்க வேண்டுமாயின், அவருக்கு மொழியியல் தேர்ச்சி முதன்மைத் தேவையாகவுள்ளது. இதன்மூலமே நவீன ஆசிரியர் கல்விச் செல்நெறியின் தொடர்பாடல் தேர்ச்சி நிர்ணயம் பெறுகின்றது. எந்தப் பாடத்தையும் சுவாரஸ்யமாகக் கறபிக்க - ஆக்கபூர்வமான சிந்தனை, அழகியலுணர்வு, ஆளுமை என்பவற்றின் விருத்திக்கும் மொழியாற்றலே செல்வாக்குச் செலுத்துகின்றது.

இன்றைய ஆரம்ப - இடைநிலை ஆசிரியர்களிடையே போதுமான மொழித் தேர்ச்சி இல்லை என்பதைப் பல ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இது மாணவர்களின் கற்றலிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்த நிலையை நீக்கி தாய்மொழி, இரண்டாம்மொழி, சர்வதேச மொழி ஆற்றல்களை விருத்தியாக்கும் செயல்நிலை ஆய்வுகள் மிக அவசியத் தேவைகளாகவுள்ளன.

## இலங்கைப் பாடசாலைகளில் கல்வியியல் ஆய்வுக் கலாசாரம்

பாடசாலைகள் தற்போது பல்வேறு பரிமாணங்களையும், உப தொகுதிகளையும் கொண்ட ஒரு பெரும் தொழிற்துறைகள் போன்றே இயங்குகின்றன. தொழிற்துறைகளில் எவ்வாறு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஒரு பிரிவு மிக இன்றியமையாததோ, அதேபோல் பாடசாலைகளிலும் தேவை. ஒவ்வொரு ஆசிரியரும், அதிபரும், கல்விப்பணிப்பாளரும் கல்வி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடவேண்டும். ஒரு ஆய்வுக் கலாசாரத்தைப் பாடசாலைகளில் ஏற்படுத்தவேண்டும். இதற்குச் செயல்நிலை ஆய்வுகள் உதவுகின்றன. சுவீடன், இந்தியா, மலேசியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்த நிலை சிறப்பாகவுள்ளது.

செயல்நிலை ஆய்வுகளின் வழியாகப் புதிய கண்டுபிடிப்புக்கள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள், புத்தாக்கங்கள், நடைமுறைகள் செயற்படுத்தப்படுகின்றன. ஆய்வு வினாக்களை, கருதுகோள்களை உருவாக்குதல், தரவுகளைச் சேகரித்தல், ஒழுங்கமைத்தல், திட்டமிடல் பகுத்தாராய்ந்து மதிப்பிடல், தீர்வுகளை நோக்கி நகர்தல் என்ற பல் பரிமாணங்களில் செயல் நிலை ஆய்வானது விரிந்து செல்கின்றது. ஆரம்பக்கல்வி ஆசிரியர் மொழி விருத்தி சார்பான எண்ணிறைந்த ஆய்வுகளைப் பாடசாலைகளில் ஒன்றிணைக்க வேண்டிய தேவை இன்று முக்கியமாக எழுந்துள்ளது. இவற்றை நிறைவு செய்ய ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒரு ஆய்வுப்பிரிவை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

செயல்நிலை ஆய்வானது, எப்போதும் செயல் சார்ந்தது. ஆய்வு செய்பவரே பங்கேற்று பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், நிலைமைகளை முன்னேற்றுவதிலும் ஈடுபடவேண்டும்.

ஒரு நிலை - மாற்றத்திற்குரியது எனக் காணப்படின், அந்த நிலைமைக்கான காரணங்களைக் கண்டறிந்து சீராக்கம் செய்ய செயல்நிலை ஆய்வு உகந்தது. ஒரு மொழியியல் நிலைமையை முன்னேற்றுதல் தொடர்பாகத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் போன்ற செயற்பாடு உள்ளிட்ட பழமுறைகளைக் கொண்டு நிலைமையை மதிப்பீடு செய்யவும், மாற்றங்களை இனம் காணவும் தேவைப்படின் தொடர்ந்து முன்னேற்றத்துக்காகத் திட்டமிடும் சுழற்சி முறைகளையும் செயல்நிலை ஆய்வு கொண்டுள்ளது. உதாரணமாக ஒரு பாடசாலை வகுப்பறை நிலைமை தொடர்பான செயல் நிலை ஆய்வின் செயற் கிரமங்களைப் பின்வருமாறு அமைக்கலாம்.

### செயல் நிலை ஆய்வின் செயற் கிரமங்கள்




I.ஒரு நிலைமையை, பிரச்சினையை இனம் காணல், அதுபற்றி ஏனையோருடன் கலந்தாராய்தல், அந்த நிலைமையை விளங்கிக் கொள்ளும் தகவல்களைப் பெறல் (நேர்காணல், சரியீட்டுப்பட்டியல்கள், பரீட்சைப் பெறுபேறுகள், கணிப்பீடுகள், விடய தனியாள் ஆய்வு, வினாக்கொத்து, மாணவர் பதிவுப்புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், ஆவணங்கள், பதிவேடுகள், புகைப்படங்கள்).

II. ஆய்வு வினாக்களை ஏற்படுத்தல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், பிரச்சினைகளைக் கண்டுபிடித்தல் - தீர்வுகளை முன்மொழிதல்.

III. தீர்வுகளை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், பெறுபேறுகளை மதிப்பிடல், ஏனையோரின் ஆலோசனைகளைப் பெறல்.

IV. மேலதிக நடவடிக்கைகளைத் திட்டமிடல், மேலும் தொடர வேண்டுமெனின் செயற்பாடுகளில் ஈடுபடல்.

இங்கு குறிப்பாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் மொழி வாண்மை விருத்தி, மாணவர்களின் மொழிப்பிரச்சினைகள், தீர்வுகள் தொடர்பான செயன்நிலை ஆய்வுகள் தொடர்பாக நோக்கப்படுகின்றன. ஆரம்பக்கல்வி மாணவர்களின் மொழியை விருத்திசெய்யும் ஆசிரியரின் செயற்பாடுகள் - அவரது தொழிலைப் பிரகாசிக்கச்செய்யும். இதுவே செயல்நிலை ஆய்வாகப் பரிணமிக்கும். இது விஞ்ஞானரீதியில் உதவும் தொழில்நுட்பமாகவே உள்ளது. இந்த நுட்பம் ஒரு நல்லாசிரியரின் அன்றாட நடவடிக்கையின் அம்சமாகவே பிரதிபலிக்க வேண்டும்.

## ஆரம்பக்கல்வி ஆசிரியர் மொழிவாண்மையில் மேற்கொள்ளக்கூடிய செயல்நிலை ஆய்வுகள்

ஆரம்பக்கல்வி ஆசிரியர் முதலில் தன் மொழியாற்றலை விருத்தியாக்க இத்துறை சார்ந்த ஈடுபாட்டை, விருப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்கான ஊக்கங்களை, வசதிகளை, கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், ஏனைய அமைப்புக்கள், பாடசாலை நிர்வாகம் ஏற்படுத்தவேண்டும். இதனூடாக முதலில் -

1.தாய்மொழி மூலம் கற்கும் - கிரகிக்கும் ஆற்றலையும், விளங்கிக்கொள்ளும் மாணவர்களின் ஆற்றலையும் விருத்தி செய்வதற்கான - கேட்கும் திறன்களை வளர்க்கக்கூடிய செயல் நிலை ஆய்வுகளை மேற்கொள்ளல்.

2.கேட்போரைக் கவரும் வண்ணம் தெளிவாகவும், பண்பாகவும் பேசும், கற்பிக்கும் ஆற்றலை உயர்த்தல். கற்கக் கற்றல் தேர்ச்சிமூலம் மாணவர் தான் விளங்கவும், பிறர் விளங்கவும் வாசிப்பு ஆற்றலை விருத்தியாக்கல்.

3.மாணவர்களின் எழுத்துப் பொறிமுறைத் திறன்களை விருத்தி செய்து கருத்துக்கள், சிந்தனைகள், அனுபவங்கள், பரிசோதனைகள், ஆய்வுகள் என்பவற்றை எழுதுதுமூலம் வெளிப்படுத்தல். அன்றாட வகுப்பறை மற்றும் தேவைகளுக்கு மொழியை இலாவகமாகப் பிரயோகிக்கும் திறனை வளர்த்தல்.

4.பண்டைய, இடைக்கால, நவீன இலக்கியங்களையும் அவற்றின் மரபுகளையும், பண்பாட்டு விழுமியங்களையும், பயன்பாடுகளையும் அறிதல், கிரகித்தல், விமர்சித்தல், திறனாய்வு செய்தல், இலக்கண விதிகளைப் பிரயோகிக்கும் திறனகளை வளர்த்தல்.

இந்த வகையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் மட்டத்தில் வாணமையை உயர்த்த தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

அடுத்து ஆரம்பக் கல்வி மாணவர்களின் தாய்மொழி, இரண்டாம் மொழி, சர்வதேசமொழி தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கவும் செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்ளலாம். இது மிகுந்த பயனுடையதாகும். உதாரணமாக -

- வாசிப்புக்கற்றலில் (தாய்மொழி) தரம் 2 மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அதற்கான குறைநிறைப்புப் போதனையும்.
- முதன்மை நிலை II இல் தரம் 3 மாணவர்களின் எழுதத்துப் பொறிமுறையும் சீர்மியமும்.
- தரம் 5 மாணவர்கள் கவிதை, கதை ஆக்கம், செயன்முறை ளினூடு மொழித்திறன்களை மேம்படுத்தல்.
- முதன்மைநிலை I இல் இசையும், அசைவும் அழகியல் செயலாற்றுகைமூலம் கேட்டல் மொழித்திறனை விருத்தியாக்கல்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மொழிவாண்மை விருத்தியில் தாமும் வளர்ந்து, ஆரம்பக் கல்வி மாணவர்களையும் வளர்க்க மேற்குறிப்பிட்ட செயல் நிலை ஆய்வுப் பிரயோகங்களை மேற்கொள்ளலாம். 'மொழி பெயர்த்தல், சுருக்கம் எழுதுதல், சொற்களஞ்சிய பெருக்க விளையாட்டுக்கள் - சோதனைகள், தலைப்பைக் கொடுத்துப் பேசச்செய்தல், கணிப்பொறியின் உதவியுடன் பல்வேறு மொழி விருத்தி விளையாட்டுக்கள், ஆகசுங்களில் மாணவர்களை ஈடுபடுத்தும்போது, மிகுந்த நன்மை கிடைக்கும்'.

பெரும்பாலான ஆசிரியர்கள் மொழிப் பெயர்ச்சிகளற்று, பல பிழையான வழிகாட்டல்களையும் மாணவர்களுக்குச் செய்யும் நிலைகள் இன்று பெருமளவில் ஏற்படுகின்றன. இவற்றைத் தீர்க்க ஆய்வுகளையும், புதிய செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவேண்டியுள்ளது.

நீடாடாபர் (1969) என்ற மொழியியல் அறிஞர் - மொழித் திறன்களைக் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனப் பிரித்து இந்த நான்குவகைத் திறன்களும் - நுகர்தல் திறன், படைக்கும் திறன் ஆகியவற்றுள் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றார். இவற்றை மதிப்பிட அறிவு, உணர்வு, உள இயக்கம் ஆகிய மூன்றின் அடிப்படைகளும் உதவுமெனத் தெரிவிக்கின்றார். இவை மொழி கற்கை விருத்திக்கு உதவுகின்றன. செயல் நிலை ஆய்வுகளுக்குத் துணை சேர்க்கின்றன.

## ஆய்வு வடிவமைப்பும் சட்டகமும்

ஒரு மொழிவாண்மை விருத்தி செயல்நிலை ஆய்வு, ஒரு பிரச்சினையின் தீர்வு அல்லது நிலைமை ஒன்றினை முன்னேற்றுதலை அடிப்படையாகக் கொண்டது. சரியான ஆய்வுத் தேவையும், திட்டமிடலுமே செயல்நிலை ஆய்வு வடிவமைப்பை ஒழுங்கமைக்கும். அத்தோடு, ஒரு மாதிரிச் சட்ட அமைப்பில் செயல்நிலை ஆய்வை ஒரு ஆவணமாகப் பதிப்பித்தல் வேண்டும். தலைப்பு, ஆய்வு செய்பவர், நிறுவனம், ஆய்வுக்களம் என்பவற்றுடன் பின்வரும் முறைமையை ஒழுங்கமைக்கலாம்.

I.ஆய்வுச் சுருக்கம் - அறிமுகம் மேம்படும் நிலை தொடர்பான விடயங்கள்.

II.செயன்நிலை ஆய்வுத் தேவையும், குறிக்கோளும்.

III.தரவு சேகரித்தல், கண்டுபிடிப்புக்கள், பிரச்சினைகளை இனம் காணல்.

IV.பிரதிபலித்தலும், செயலுக்கான திட்டத்தை வரைதலும்.

V.பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்தல்.

VI.பெறுபேறுகள், தொடர்ந்து செய்யவேண்டியவை.

VII.ஆய்வு நிறைவுரை - ஆய்வின் நிறைவு தொடர்பான சாராம்சம், ஆய்வாளர் மனநிலை, ஆய்வு ஒழுக்கம், பின்னிணைப்புக்கள்.

என்ற ஒழுங்கில் செயல்நிலை ஆய்வுகளை எழுத்து வடிவில் ஒரு ஆவணமாக்கலாம். 'இவ்வாறான செயல்நிலை ஆயவுகள் - கடுமையான ஆய்வு விதிகள் சாராத, தர விருத்தி சார்ந்த, விமர்சிக்கத்தக்க, மீள்நோக்குடைய, விஞ்ஞான சிந்தனையில் அமைந்த பரிசோதனை என ஐந்தாக உள்ளது. இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது குறிக்கோளை அடைவதற்கான மதிப்பீட்டாய்வாகவுள்ளது.

## மொழி கற்றல் குறிக்கோளை அடைவதற்கான மதிப்பீட்டாய்வு

மொழி கற்றல் - கற்பித்தல் நிகழ்வுகளில் கற்பவனின் அடைவு விகிதத்தையும், கற்பிப்பவரின் திறமையையும் நெறிமுறைப்படுத்தும் செயல்நிலை ஆய்வுகள் குறிக்கோள்களை அடைந்ததா? என்பதைக் கண்டறிய மதிப்பீட்டாய்வுகள் தேவை. இதில் கண்காணிப்பு முறைமைகளும், முன்னேற்றக்கட்டுப்பாட்டு நுட்பமுறைகளும் பிரயோகப்படுத்தல் வேண்டும்.

இவ்வாறாக ஆரம்பக்கல்வி ஆசிரியர் மொழிவாண்மையை விருத்தி செய்வதில் செயல்நிலைக் கல்வி ஆய்வுகள் நவீன கல்விச் செல்நெறிகளில் முதன்மையாகவுள்ளன. இவற்றின் மூலம் எதிர்கால சந்ததிகளான மாணவர்களுக்கும், கல்வியூட்டும் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் புதிய செயற்பாடுகளை, பிரயோகங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

---

## வெளிவளர் காதல்

சு. வில்வரத்தினம்.



ஏன்? ஏன் இப்படியாயிற்று எமது கடல்வெளி?
எங்கள் கடலாள் ஊட்டி வளர்த்த உயிர்மையான
கண்ணாடி நீர்ச்சுனைக்காடுகள் என்னாயின?
யார்தன் சூழமைவைக் காவுகொண்டார்?
யார்மேலே பழியுரைக்க?
அந்தத் துவக்குக்காரனைத்தான் மனசு
ஆயிரந்தடவை திட்டித்தீர்க்கையில்
எனைக்கடந்து செல்கிறான் ஒரு கோடரி மனிதன்
அந்த ஒற்றைப் பறவையின் ஒரு கோடரி மனிதன்
அந்த ஒற்றைப் பறவையின் இளைப்பாறுதலுக்கு
இறுதிப் புகலிடமாயிருந்த
மரத்தின் மீதவன் கோடரி விழுகிறது.
அந்தரித்லையத் தொடங்கிய அந்தப் பறவையின்
ஆன்மாவின் துடிப்பு என்னிலும் தொற்றியது.
எனது சூழலெங்கும் நான் விரித்து நின்ற சிறகுகள்
துடித்தன.
எனது சூழலின் இயல்வெளி ஆன்மா தகிக்கிறது.
எனது இளவயசுக் கனவுத் துளிர்கள் தவிக்கின்றன.
எனது வாழ்வியலில் பச்சையம் ஊறச்செய்த
கடல்வனச் சூழல் தன் சுயவனப்பிழந்து நின்றது.

எங்கள் கடலினியாள் வளர்த்த
காதல் வெளியை நாங்கள் இழந்தோம்.
காவல் வேலியை நாங்கள் அழித்தோம்.
காட்டுக்காவல் இயற்கைக் காப்பரண் தூர்த்தோம்.
சீறடிச்சிலம்புக் கடல் நாச்சியாரைக்
கோபங்கொள்ள வைப்பதெங்கள் கொள்கையாயிற்று
யாரேனும் சொல்க
இவளின் கோபம் தணித்து குளிர்விக்கக் கரையில்
பச்சையக் காடுகள் இயற்றும் திறன்
எங்கள் கைவசம் உண்டா?
இழந்துபோன கடலோரச் சூழலின் அழகியலை
கண்ணாடி நீர்ச்சுனைகளின் நடுவே
மீள்குடியமர்ந்த மார்க்கம் ஏதும் உளதா?
யாரேனும் சொல்க
ஊர்கூடி மறுபடியும் உருவாக்கித்தருதல் இயலுமா
உகந்ததோர் உயிர்ச்சூழல் வெளியை?
உளதா ஏதும் வழி?
எழுமா மறுபடியும் எமது இயல் ஆன்மவெளி?
மண்ணின் மீதான ஆன்மக் காதலர்கிது விண்ணப்பம்

**சூழல் விழிப்புணர்வு மாதத்தை ஒட்டிய கவிதை**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலேயே செய்வர்*
*திறப்பாடு இலாஅ தவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## மீண்டும் போரா? அல்லது சமாதானமா? முடிவெடுக்க முடியாது தடுமாறும் அரசு!

சமாதானம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்த சந்தேகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு யுத்தம் குறித்த அச்சமும் குழப்பமும் ஏற்படத் தொடங்கியுள்ளது என்றே கூற வேண்டியுள்ளது.

வெளிப்பார்வைக்கு சமாதானத்தின் மீது தீவிரமான அக்கறை கொண்டு செயற்படுவதாகக் காட்டிக் கொள்ளும் ஜனாதிபதியும் அரசாங்கமும், உண்மையில் ஆத்மார்த்தமாக அது குறித்த நியாயபூர்வமான சிந்தனையுடன் எந்தவகையிலும் இயங்குவதாக இல்லை.

மாறாக சமாதானத்தை கேள்விக்கும், கேலிக்கும் உள்ளாக்கும் யுத்த இலக்குடன் கூடிய நடவடிக்கைளில் பகிரங்கமாகவும், இரகசியமாகவும் ஈடுபடும் முனைப்புடன் கூடிய பூலோபாயங்களுடன் செயற்திட்டங்களை முன்னெடுப்பதிலேயே அரசும், ஜனாதிபதியும் ஆர்வம் கொண்டுள்ளமையை அவர்களின் சமகாலச் சிந்தனைப் போக்கு உறுதிப்படுத்தி நிற்கின்றது.

நேர்வே அரசை சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட வலிந்தழைத்த இலங்கையரசும், ஜனாதிபதியும் அதன் முயற்சிகளுக்கு நியாயமானதும், விசுவாசமானதுமான ஒத்துழைப்பை எந்த வகையிலும் பரந்த மனத்துடன் இதுவரை வழங்கியது கிடையாது.

வெறுமனே சந்திப்புக்களும், பேச்சுக்களும் மட்டும் சமாதானத்தை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்க எந்த வகையிலும் உதவப்போவதில்லை என்பதை கடந்த கால சமாதான நடவடிக்கைகளின் தோல்விகரமான முடிவுகள் அனுபவப் பாடமாக தமிழ் மக்களுக்குக் கற்றுத்தந்தேயுள்ளன.

எனினும் அரசு தொடர்ந்தும் அதேவகையிலான அணுகுமுறைகளையே கையாளத் தொடங்கியுள்ளமையானது அதன் சமாதானம் தொடர்பான பற்றின்மையையும், இனப்பிரச்சினையை நியாயபூர்வமாகத் தீர்க்கும் விருப்பின்மையையும் அம்பலப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இது 'அரச பேரினவாதப் பயங்கரவாதம்' கடந்த கால வரலாற்றுத் தவறுகளின் அனுபவங்களிலிருந்து இன்னமும் சரியான பாடத்தை கற்றுக்கொள்ளவில்லை என்பதை வலியுறுத்துவதாகவே உள்ளது.

அதுமட்டுமல்ல அது எந்தக் காலகட்டத்திலும் எந்த அனுபவங்கள் மூலமும் எத்தகைய பாடத்தையும் கற்றுக் கொள்ளும் மனோபாவத்துடன் இருக்காது என்ற செய்தியை தெரிவிப்பதாகவும் உள்ளது.

ஒரு முக்கியமான தேசியப்பிரச்சினையை, அதுவும் நீண்டகாலம் புரையோடிப்போயுள்ள பிரச்சினையை தீர்க்க சர்வதேச சமூகத்தின் அனுசரணை மற்றும் ஆதரவுடன் கூடிய வாய்ப்பு ஒன்று கிடைத்துள்ள வேளையில் அதனைச் சரியான முறையில் பயன்படுத்த தாமதிப்பதும், தயக்கம் காட்டுவதும் மட்டுமல்லாது அந்த வாய்ப்பானது முற்றாக கைநழுவிப்போகுமளவுக்கு அக்கறையின்றி இருப்பதும் அரசின் தேசிய நலன் மீதான வெறுப்பின்மையை உணர்த்தவே செய்கின்றது.

போர் பூலோபாயங்களுடன் கூடிய பாதுகாப்புத் துறை சார்ந்த ஒப்பந்தங்கள், கொள்வனவுகள், படைத்தரப்பினரின் பயிற்சிகள் போன்றவற்றில் அரசு காட்டும் அக்கறையும் ஆர்வமும் மிகவும் அதிகளவில் வளர்ந்து வருகின்ற அதேவேளை படையினருக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையையும் தீவிரப்படுத்த யோசனை கூறப்பட்டிருப்பதைப்பார்க்கும் போது யுத்த மூலம், சமாதானம் என்ற முரணிலைக் கோட்பாட்டுடன் கூடிய 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற தனது தோல்வி கண்ட சித்தாந்தத்தை ஜனாதிபதி இன்னமும் கைவிடத் தயாரில்லை என்றே அறியக்கூடியதாகவும் உள்ளது.

போராயுதங்கள், யுத்தவிமானங்கள், போர்க்கப்பல்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்து அவற்றின் நடுவே நின்றுகொண்டு சமாதானத்திற்குத் தயாரென்று மிரட்டல் தொனியில் அறைகூவல்விடுக்கவா அரசு விரும்புகின்றது? அல்லது ஜனாதிபதி விரும்புகிறார்?

சமாதான ஆதரவுச் சக்திகளுடன் முரண்பட்டுக் கொண்டு, அதற்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்து அவர்களுடன் அணிவகுத்துத் தலைமைதாங்கிநிற்கும் ஜனாதிபதிக்கு, சமாதான முயற்சியிலான தீர்வொன்றை நோக்கிய நகர்வுகளை முன்னெடுக்கும் துணிச்சல் நிச்சயமாக இருக்கப்போவதே கிடையாது.

ஏதோ ஒரு தேவையின் அவசியத்தாலோ, சமூகத்தின் நெருக்குவாரத்திலோ, ஜனாதிபதி சமாதானத்தை முன்னெடுக்கும் சுயவிருப்பற்ற செயலை மேற்கொள்ள நேர்ந்தாலும் அதற்கு அவரது பேரினவாதப் பரிவாரங்கள் அனுமதிக்கப் போவது கிடையாது.

'இலங்கையின் பிளவுபட்ட அரசியலின் ஆதரவை சமாதான முயற்சிகளுக்கெனப் பெற்றுக்கொள்வது என்பது ஒரு போதுமே சாத்தியமாக இருந்ததில்லை' என்ற முன்னாள் பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனின் கருத்து இவ்விடயத்தில் கவனத்தில கொள்ள வேண்டிய விடயமாகும்.

அப்படியாயின் சமாதானம் தொடர்பான அரச தலைமையின் இறுதி முடிவு என்னவாக இருக்கும் என்ற கேள்விக்கும், அதற்குப் பதில் கூறவேண்டிய பொறுப்பு யாருக்கானது என்ற கேள்விக்கும் என்ன பதில் ?.... இவைகள் விடைகாணமுடியாத கேள்விகளேயாகும்.

யுத்தமா?, சமாதானமா? என்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலக்கேள்விக்கு இலங்கையின் ஆளும் அரசோ, ஆண்ட அரசுகளோ உறுதியான பதிலை வழங்கும் பலமான நிலையில் ஒரு போதுமே இருந்ததுமில்லை. இருக்கப்போவதுமில்லை....

# நாடும் நடப்பும்




## பொல்காவெல விபத்துச் சம்பவத்தில் இரண்டு மாணவிகள் உட்பட மூவர் பலி

பொல்காவெல றத்மல்கொடவிலுள்ள பாடசாலைக்கு அருகில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் இரண்டு பாடசாலை மாணவிகள் உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 6.45 மணிக்கு பாடசாலைக்கு அருகிலுள்ள பாதசாரிகள் கடவையைக் கடக்க முற்பட்ட மாணவிகள் வேகமாக வந்த தனியார் சிற்றூர்தியொன்று மோதியதில் 5ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் இரு மாணவிகளும் மற்றும் ஒரு மாணவியின் சிறிய தாயாரும் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் மேலும் பலர் காய மடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பலியான இரு மாணவிகளும் குருநாகல் சென். போல்ஸ் கொன்வன்றில் கல்வி பயில்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதசாரிகள் கடவையில் கடமைபுரியும் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் வழமையாக அந்த இடத்திற்குக் காலம் தாழ்த்தியே பணிக்கு சமூகமளிப்பதாக பிரதேசவாதிகள் முறையிட்டுள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவத்துக்குக் காரணமான வாகனசாரதி கைது செய்யப்பட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். சாரதி வாரம் இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் இந்த வாரம் மட்டும் எட்டுப்பேர் வாகன விபத்துக்களில் கொல்லப்பட்டனர்.

## அனுமதியின்றி வெட்டப்பட்ட மாட்டு இறைச்சிகள் பறிமுதல்

குருநகர்ப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மாட்டிறைச்சி யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குருநகர்ப் பகுதியிலுள்ள மூன்று இறைச்சிக் கடைகளில் யாழ். மாநகரசபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக வெட்டப்பட்டு மாட்டு இறைச்சி விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, குறிப்பிட்ட கடைகளுக்குத் திடீரென விஜயம் செய்த மாநகரசபை சுகாதாரப் பிரிவினரும், யாழ். மாநகரசபை பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களும் இந்தக் கடைகளிலிருந்து பெருமளவான இறைச்சியைக் கைப்பற்றினர்.

குறிப்பிட்ட கடைகளின் உரிமையாளர்கள் தாம் சட்டவிரோதமாக மாடுகளைக்கொன்று, இறைச்சியை விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டனர்.

யாழ். மாநகரசபையின் அனுமதி பெறாது மாடுகளைக் கொன்று, இறைச்சி விற்பனை செய்தமை தொடர்பாக இவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கொழும்பில் கலந்துரையாடல்

மனிதவள அபிவிருத்தி தொழிலாளர் பயிற்சி நெறி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 9.00 மணிக்கு கமத்தொழில் சார்ந்த விற்பனை அபி விருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு, கல்வி வாழ்க் கைத்-தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கலந்துகொள்ளுமாறு அமைச்சின் செயலாளரால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சிகள் தொடர்பான தற்போதைய நிலைமை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பாகவே ஆராயப்படவுள்ளது. கலந்துரையாடலில் பங்குபற்றும் பரிசோதகர்கள் தமது செயலகப் பிரிவில் இயங்கும் பயிற்சி நிலையங்கள் தொடர்பான சகல விபரங்களுடனும் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (113)

## கிளை முகாமையாளர் திடீரென இடைநிறுத்தம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொடிகாமம் பல. நோ.கூ.சங்கம் ஒன்றில் பணியாற்றிய கிளை முகாமையாளர் ஒருவரை முன் அறிவித்தல் இன்றி பணியில் இருந்து நீக்கியமை தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மிருசுவில் கிழக்கு மிருசுவிலை சேர்ந்த வே. வினாசித்தம்பி என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

தான் கிளை முகாமையாளராகக் கடமையாற்றியபோது, தவறிழைத்ததாக தெரிவித்து திடீரெனத் தன்னைப் பணியிலிருந்து இடைநிறுத்தியதாகவும் இதற்காக விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொண்டு தன் மீது குற் றம் எதுவும் இல்லை என அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித் தது. இதைவிட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவும் தனக்கு நிவாரணம் வழங்குமாறு கோரியும் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிராமிய அபிவிருத்திப் பணிகள் நியாப் உதவித் திட்டத்தின் கீழ்

தேசிய எழுச்சிப் பேரவையூடாக நியாப் திட்டம் மூலம் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் கிராம மட்டங்களிலே முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான ஆரம்ப கட்ட செயலமர்வு அரச அதிபர் தலைமையில் அண்மையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் கிராமமட்டங்களில் குளங்கள் புனரமைப்பு, சிறு கால்வாய்கள் புனரமைப்பு, சிறு வீதிகள் புனரமைப்பு, வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கான ஜீவனோபாய உதவி வழங்கல், பொது மண்டபங்கள் அமைத்தல், குடிநீர் கிணறு அமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் ஆரம்பகட்ட பணியாக தற்போது தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக் கிளைகள் மூலம் கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பான திட்டவரைபுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டவரைபுகள் அனைத்தும் தேசிய எழுச்சிப் பேரவையினராலும் மாவட்ட செயலகத்தினாலும் பரிசீலனை செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் இருபது கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

தற்பொழுது யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச ரீதியிலான தேசிய எழுச்சிப் பேரவைகள் ஊடாக இந்தத் திட்டம் தொடர்பான விளக்கங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (94)

அரசியல் நோக்கு

மெல்பேர்னிலிருந்து சபேசன்

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், இலங்கை அரசுக்கும் இடையே சமாதானப் பேசசுவார்த்தைகள் என்று ஆரம்பமாகும் என்ற எதிர்பார்ப்புத்தான்





அண்மைக்காலம் வரை எழுந்திருந்தது. ஆனால், இப்போதோ பேச்சுவார்த்தைகள் என்று ஆரம்பமாகும் என்ற எதிர்பார்ப்பு மாறி, என்றாவது ஆரம்பமாகுமா? என்ற ஏக்கம் தான்

தலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்குரிய ஆலோசனைத் திடடம் உடனடியாக அமுலாக்கப்பட வேணடும்.

☞ தேசிய இனமான தமிழீழ மக்கள் தமக்குரித்தான சுயநிர்ணய உரிமையின் மூலம் பிரிந்து சென்று, தனியரசை அமைக்கும் தகைமை உரியவர்களாவார்கள்.

மேறகூறிய நான்கு முக்கிய வேடகைகளின் ஊடே, தற்போதைய அரசியல் நிலவரத்தையும், எதிர்கால

யாளராகத் தாம் கலந்துகொள்வதில் பிரயோசனமில்லை என்று நோர்வே அரசு விலகிக் கொண்டதை, நாம் இந்த வேளையில் எண்ணிப் பார்க்கின்றோம்.

இன்று ஜனாதிபதியாக அதே சந்திரிகா இருக்கின்ற வேளையில் அவருடைய அரசியல் கட்சிகளின் கூட்டணிதான் அரசு அமைத்துள்ளது. சிறுபான்மை அரசாக இருந்த போதிலும், சா்வ வல்லமை படைத்த ஜனாதிபதி - நாடாளுமன்றத்தில் அரசை அமைத்த அரசியல் கட்சிகளின் கூட்டணியும் ஒரு கூட்டுப் பறவைதான்! அல்லது ஒரு கூட்டணிப் பறவைகள்தான்.

தமிழீழ மக்கள் பொதுத்தேர்தல் ஊடாகத் தெளிவான இறையாணையைக் கொடுத்துள்ள வேளையிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை புதிய அரசுடன் நடாத்துவதற்குத் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவாகத் தெரிவித்தனா்.

இந்த வேளையிலும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு, மீண்டும் நோர்வே அரசை - அனுசரணையா

கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்தும் ஏக காலத்திலேயே பேசித்தீர்க்கவேண்டும் என்று கூறி வந்த ஜனாதிபதி சந்திரிகா - கடந்த (ஜுன்) பத்தாம் திகதி அன்று, முழு மனமாற்றம் அடைந்தவர் போல் வாக்குறுதி ஒன்றை அளித்திருந்தார்.

கடந்த பத்தாம் திகதியன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

அந்தச்சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகா பின்வரும் உறுதிமொழியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்திருந்தார்.

'சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்தே முதலில் பேசித்தீர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் விடுதலைப்புலிகள்- உறுதியாக நிற்பதன் காரணமாக நான் எனது மனதை இப்போது மாற்றிக்கொண்டு விட்டேன்.

இடைக்காலத் தன்னாட்சி அதி

விக்கிரமசிங்கவுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதை ஏனோ மறந்து விட்டார்.

இப்போது சமாதானப் பேச்சுவாாத்தைகள் முறையாக நடைபெற வேண்டும் என்பதற்காக, தேசிய ஆலோசனைச்சபை ஒன்றை நிறுவப்போவதாக சந்திரிகா அறிவித்திருக்கிறார்.

கடந்த 55 ஆண்டுக்காலத்தில், மாறிமாறி வந்த சிங்கள அரசுகள் ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத சபைகளையும் ஆணைக்குழுக்களையும் நியமித்து, தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வந்ததை வரலாறு காட்டி நிற்கிறது.

இப்போது மீண்டும் காலத்தை இழுத்தடிக்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

தன்னுடைய சுயநல எதிர்காலத்திற்காக காலத்தை இழுத்தடிக்க வேண்டிய தேவை சந்திரிகாவுக்கு இருக்கலாம். ஆனால், தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில், ஏற்கனவே காலம் கடந்துபோய் விட்டது.

'இதுவரை காலமும் பொறுமை காத்தது போதும், இனிப்பொங்கி எழுவோம்' என்ற நிலைப்பாடு தமிழீழ மக்களிடையே உருவாகி வருவதை நாமும் உணர முடிகின்றது.

சந்திரிகா அரசின் ஊடாக உருப்படியான தீர்வு எதுவும், தமிழ் மக்களுக்குக் கிட்டப்போவதில்லை என்ற உண்மையை, நிதர்சனத்தை நாம் மட்டுமல்ல, உலக நாடுகளும் உணர வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய திட்டவரைபைச் சமர்ப்பித்த சில தினங்களுக்குள்ளேயே, மூன்று முக்கிய அமைச்சுக்களைத்

# தமிழரின் பொறுமையை சோதிக்கும் அரசு: தவிக்கவிடப்பட்டுள்ள நிலையில் சமாதானம்

எஞ்சியிருக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த எதிர்பார்ப்பும், ஏக்கமும் ஒரு புறம் இருக்கட்டும். யதார்த்த நிலை எவ்வாறு இருக்கிறது - என்பது குறித்துச் சிந்திப்பதுதான், இவ்வேளையில் பயனுள்ளதாக இருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசு - கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற, ஜனாதிபதி சந்திரிகாவின் தேர்தல் கூட்டணி அரசு அமைத்த போதும் கூட, புதிய அரசுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தத் தயார் - என்றுதான் விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான முன்னைய அரசு - தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழினத்தை அழிவின் விளிம்பிற்குக் கொண்டுசெல்ல எத்தனித்து இருந்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தனது சமாதானக் கரத்தை நீட்டிய தான்து, சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த நம்பிக்கையை வலுப்படுத்தியதாகவே அமைந்திருந்தது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவின் அறிக்கைகளும், முன்னுக்குப்பின் முரணான நடவடிக்கைகளும், இந்த நம்பிக்கையைச் சிதறடித்து வருகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெறாமல், தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தம் வலிந்து திணிக்கப்படும் காலம் நெருங்கி வருகின்றதோ என்கின்ற ஐயம் எழுந்துள்ளது.

இலங்கைத்தீவில் தற்போது அமுலில் இருக்கும் ஜனநாயக நடைமுறைக்கு ஏற்ப - தமிழினம் ஒரு தெளிவான ஆணையை, தீர்ப்பை, கடந்த பொதுத் தேர்தலின் ஊடே வழங்கியுள்ளது.

ஜனநாயக ரீதியிலான அந்தத் தீர்ப்பினூடே, ஈழத் தமிழினம் தனது வேட்கைகளைப் பட்டியல் இட்டுத் தெளிவுபடுத்தியிருந்தது.

☞ இன்றைய எமது தர்க்கத்தின் அடிப்படைக்கு வலுச்சேர்க்கும் காரணமாக, தமிழ் மக்கள் தெரிவித்த வேட்கைளில் சிலவற்றை இந்த வேளையில் குறிப்பிட்டுச் சிந்திக்க விழைகின்றோம்.

☞ தமிழீழ விடுதலைப்புலிகளே, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் ஆவார்கள்.

☞ தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளுடன் மட்டுமே அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தவேண்டும்.

☞ தமிழ் மக்களின் சார்பில் விடு

அரசியல், இராணுவ நகர்வுகளையும் சிந்திக்க விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள் தங்களுடைய ஆணையை, ஜனநாயக ரீதியில் தெளி

**அரசியல் யாப்பு விடயத்தில் தன்னுடைய கனவு நிறைவேறியதும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜே.வி. பியின் துணையுடன் குழப்பி, மீண்டும் ஒருமுறை தமிழினத்தின் மீது பாரிய யுத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணத்தில் தான் - சந்திரிகா இருக்கின்றார் என்பதற்கும் வலுவான காரணங்கள் வெளிப்படையாக தெரிகின்றன.**

வாகக் கொடுத்திட்ட பின்னர், சமாதானப் பேச்சுக்களைப் புதிய அரசுடன் ஆரம்பிப்பதற்குத் தயார் என்ற தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்த பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைகளை எதிர்பார்த்து அனைவரும் காத்திருந்தனர்.

அதுவரை காலமும் நோர்வே சமாதான அனுசரணையாளர்கள் மீது- வெளிப்படையான வெறுப்பையும், அதிருப்தியையும் காட்டி வந்த சந்திரிகா தன்னுடைய சமாதான முகமூடியை மீண்டும் மாட்டி, நோர்வே அரசு மீண்டும் தனது சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து நடாத்தலாம் என்று பச்சைக்கொடியை - மனனிக்கவும் - நீலக்கொடியை - காட்டிய போது, நல்லது நடக்கப்போகின்றது என்ற நம்பிக்கை துளிர்விட்டதும் என்னவோ உண்மைதான்.

சந்திரிகா தலையசைத்த அந்தக் கணத்திலிருந்து இன்றுவரை நோாவே அனுசரணையாளர்கள் எத்தனை தடவைகள் இலங்கை வந்து போயுள்ளார்கள் என்று நாம் கணக்கு வைத்திருக்கவில்லை.

ஆயினும், அவர்கள் தமிழீழத்துக்கும் - கொழும்புக்குமாக ஓடித் திரிந்ததை, மன்னிக்கவும் - பறந்து திரிந்ததை நாம் எல்லோரும் அறிவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் யாவும் இதய சுத்தியோடு, தெளிவாக, விளக்கமாக இருக்கையில் - சந்திரிகாவின் அறிவிப்புக்களும், நடவடிக்கைகளும் முன்னுக்குபின் முரணாக இருப்பதன் காரணமாக, இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடங்கலுற்று இருபபதை நாம் காண்கின்றோம்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலப்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் - பிரதமா் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் எழுந்த பிணக்குகள் தீராத வரையில், பேச்சு வார்த்தைகளில் அனுசரணை

ளர்களாக சந்திரிகா அழைத்துள்ள வேளையிலும், அதனை ஏற்றுக் கொண்டு நோர்வே பிரதிநிதிகள் ஓடிப்பறந்து வருகின்ற வேளையி

லும் சமாதானத்துக்கான விடிவெள்ளி தோன்றவில்லையே! ஏன் தோன்றவில்லை? - யார் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படாததன் காரணத்தை மட்டுமல்ல, நாளை பெரிய யுத்தமொன்று தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுவதற்குரிய காரணத்தையும், அவற்றின் முழுப்பொறுப்பையும், சந்திரிகாவும், அவருடைய அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும் என்பதை நாம் இந்த வேளையில் வலிமையாக வலியுறுத்துகின்றோம்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு - தமிழ் மக்களின் நலனோ அல்லது சிங்கள மக்களின் நலனோ முக்கியமல்ல என்பதையும், அவருடைய அரசியல் எதிர்காலமும், சுயநலமும்தான் முக்கியம் என்பதையும் நாம் பல ஆண்டுகளாக வலியுறுத்தித் தர்க்கித்து வந்துள்ளோம்.

இப்போது தற்போதைய அரசியல் கால நிலவரங்களையும் சுட்டிக்காட்டி, சில முக்கிய விடயங்களை சிந்திக்க விழைகின்றோம்.

தன்னுடைய அரசியல் எதிர்காலத்துக்காக, இலங்கை அரசியல் யாப்பை மாற்றவேண்டிய கட்டாயத்தில் சந்திரிகா இருக்கின்றார்.

சமாதானப் பேச்சுக்களைக் காரணமாக வைத்துத்தான் - அரசியல் யாப்பை மாற்றுவதற்குரிய ஆதரவை அவர் பெறமுடியும். அதனை சந்திரிகா செய்து முடிக்கும்வரை, தமிழீழ விடுதலைப்புலிகளை சமாதானப் பேச்சுக்களில் இணக்கமுள்ள நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அரசியல் யாப்பு விடயத்தில் தன்னுடைய கனவு நிறைவேறியதும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜே.வி. பியின் துணையுடன் குழப்பி, மீண்டும் ஒருமுறை தமிழினத்தின் மீது பாரிய யுத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணத்தில் தான் - சந்திரிகா இருக்கின்றாா் என்பதற்கும் வலுவான காரணங்கள் வெளிப்படையாக தெரி




காரசபை குறித்தே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளின் போது விவாதிப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது'

என சந்திரிகா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜுன் பத்தாம் திகதி அன்று வாக்குறுதி அளித்துள்ளார். இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினரான திரு ஜோசப் பரராஜசிங்கம் ஊடகங்களுக்குத் தகவல் தருகையில், 'ஜனாதிபதி சந்திரிகா - அன்றைய தினம் இந்த வாக்குறுதியை ஒருமுறை அல்ல, மூன்று முறைகள் திரும்பத்திரும்ப கூறினார்.' என்று தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், கடந்த 12 ஆம் திகதியன்று நாட்டு மக்களுக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து தொலைக்காட்சியூடாக சந்திரிகா உரையாற்றியபோது, வேறு விதமான கருத்துக்களே அவர் வாயிலிருந்து வெளிவந்தன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேசப்படும் என்று அவர் இரண்டு தினங்களுக்கு முன்பு கொடுத்த, வாக்குறுதியைப் பற்றிக் கவலைப்படாமல், 'இது குறித்து இணக்கப்பாடு ஒன்றினைக் காண்பதற்கு அரசு விரும்புகின்றது'- என்று தெரிவித்தார்.

அது மட்டுமல்ல, சந்திரிகா அன்றையதினம் தொலைக்காட்சியூடாக வேறு ஒரு பொய்யையும் சொல்லியிருக்கின்றார். பல ஆண்டு காலமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு ஒன்றினைக் காணபதற்கு அரசு முயன்று வந்துள்ளது. அந்தச் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்றும் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் -முன்னர் திம்புவிலும் பின்னர் பிரேமதாஸாவுடனும், அதன் பின்னர் தன்னுடனும், அதற்குப் பின்னர் ரணில்

தன் கையகப்படுத்தியவர்தான் சந்திரிகா.

இரண்டரை ஆண்டு காலத்துக்கும் மேலாக போர் மட்டும் ஓய்ந்திருந்தாலும், எமது மக்களின் இன்னல்கள் மட்டும் ஓயவில்லை. எமது மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

சமாதானத்துக்கான எந்தவிதமான பலனையும் எமது மக்கள் பெறவில்லை.

இதனை உலக நாடுகளும், நிதி உதவி செய்யும் நாடுகளும், இலங்கைத்தீவில் உண்மையான சமாதானதீர்வை நாடி நிற்கின்ற நாடுகளும் உணரவேண்டும்.

இலங்கைத்தீவின் சமாதானம் குறித்துப் பேசுகின்ற இந்த நாடுகளுக்கு - இந்த விடயத்தில் பாரிய தார்மீகக் கடமை ஒன்று இருக்கின்றது. இது புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்களுக்கும் ஒருங்கே பொருந்தும்.

கடந்த 17 ஆம் திகதியன்று ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் நடாத்திய பிரமாண்டமான பேரணி- ஒரு விடயத்தை இலங்கை அரசிற்கும், உலக நாடுகளுக்கும் தெளிவுபடுத்தியுள்ளது.

'எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லைக்கு நாம் வந்து விட்டோம்.'

எரிமலையொன்று குமுறத் தொடங்கி விட்டது. அதற்குரிய அறிகுறிகளும் தெரியத் தொடங்கிவிட்டன. உடனே ஆவனசெய்ய வேண்டும். தமிழீழ மக்களின் உள்ளக் குமுறல் உலகெல்லாம் பீறிட்டு வெளிவரப் போகின்றது. இந்த வேளையில் இலங்கை அரசுக்குத் தகுந்த அரசியல் அழுத்தங்களை, உலக நாடுகள் பிரயோகிக்க வேண்டும். அதற்குரிய செயற்பாடுகளை, புலம் பெயர்ந்த தமிழினம்தான் முடுக்கி விடவேண்டும்.

# கடத்தப்பட்ட தென்கொரிய பிரஜை கழுத்துவெட்டப்பட்டு கொலை!



(பாக்தாத்)

இஸ்லாமியப் போராளிகளால் ஈராக்கில்வைத்து கடத்தப்பட்ட தென்கொரியப் பிரஜையான கிம் சன் - இல் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்டார்.

கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இவரது சடலம் ஈராக்கிலுள்ள பாக்தாத்திற்கும், பலூஜாவிற்கும் இடைப்பட்ட வீதியில் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டது.

அராபிய அல் ஜெசிரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட வீடியோ நாடாவில் கிம் சன்னை கொலை செய்தவர்கள் ஜமாத் அல் - தக்கிட் மற்றும் ஜிகாத் அமைப்புக்கள் என அடையாளம் காட்டப்பட்டது.

கிம் சன் கொல்லப்பட்ட தகவல் அறிந்தவுடன் தென்கொரிய தேசிய பாதுகாப்புச் சபையை அரசாங்கம் அவசரமாக நேற்றுமுன்தினம் கூட்டியது. இதன்போது ஈராக்கிற்கு மேலதிகமாக அனுப்ப எண்ணியுள்ள மூவாயிரம் துருப்புக்களை வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு அனுப்பப்படும் மூவாயிரம் துருப்புக்களும் ஏற்கனவே ஈராக்கில் நிலைகொண்டுள்ள 600 தென்கொரியத் துருப்புக்களுடன் இணைந்துகொள்ளவுள்ளனர். இவர்களனைவரும் குர்திஷ் பகுதியான கிர்பில் நகரத்தில் தங்கவுள்ளனர்.

இதேவேளை கிம் சன்னின் படுகொலையை அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன. இந்தப் படுகொலை இதயமற்ற ஈவிரக்கமற்றவர்களால் நடத்தப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கிம் சன் கொல்லப்படமாட்டார் என்ற நம்பிக்கையில் இருந்த தென்கொரிய மக்களுக்கு இவரது படுகொலை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிம் சன் கொல்ல்ப்பட முன்னர் இஸ்லாமியப் போராளிகள் ஒரு அறிக்கையை கொரிய மக்களுக்கு வாசிததனர். இதில் அவர்கள் - ஈராக்கிற்கு தென்கொரியப் படைகள் அமெரிக்காவின் நலனுக்காகவே வந்துள்ளன. ஈராக்கின் நலனுக்காகவல்ல எனத் தெரிவித்தனர்.

இந்தக் கொலையைக் கண்டித்துள்ள அமெரிக்க அதிபர் புஷ் இந்த சுதந்திர உலகத்தை குரூரமான நடவடிக்கைகள் மூலம் அச்சுறுத்திவிட முடியாதெனத் தெரிவித்தார்.

தனது ஏழை மகனை தென்கொரிய அரசாங்கம் படுகொலை செய்துவிட்டதாக கிம் சன்னின் தாயார் கண்ணீருடன் தெரிவித்தார்.

கிம் சன்னின் படுகொலையை இட்டு தான மிகவும் துன்பமடைவதாகவும், முன்னர் அவரைக் காட்டிய வீடியோ நாடாவில் நான் இறக்க



விரும்பவில்லை என அவர் கூறியதை மீள நினைத்துப் பார்க்கையில் தனது இதயம் வெடிப்பதைப் போலுள்ளது எனவும் தென்கொரிய அதிபர் றோ தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் சம்பவத்தை யிட்டு ஈராக்கிற்கு அனுப்பத் திட்டமிட்ட 3000 தென்கொரியத் துருப்புக்களும் அனுப்பப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈராக்கின் இடைக்கால பிரதமருக்கு இணையத்தளமூலம் அச்சுறுத்தல்!



ஈராக்கின் இடைக்கால நிர்வாக அரசின் பிரதமர் அயாட் அலவி கொல்லப்படுவாரென அல்கொய்டா அமைப்பின் தலைவர்களில் ஒருவரான அபு முசாப் அல் சர்க்காவி, ஓடியோ நாடாமூலம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த ஓடியோ நாடா இணையத்தளமொன்றில் ஒளிபரப்பப்பட்டது. இதில் சர்க்காவியின் அமைப்பான ஜமாத் அல் - தக்வீட் மற்றும் ஜிகாத் எனத் தெரிவிக்கப்பட்டது. ஒளிபரப்பப்பட்ட ஒலிநாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈராக்கின் 'இடைக்காலப் பிரதமரான அயாட் அலவியே உமது உயிரைப் பறிப்பதற்கான நஞ்சும், வாளும் உள்ளன. அத்துடன் உம்மைக் கொல்லும்வரை எமது நடவடிக்கை தொடர்ந்துகொண்டேயிருக்கும்'

பிரதமர் அலவி சாத்தானுடன் இணைந்து துரோகத்தனமாகச் செயற்படுவதாகவும், தேசத்துரோகியெனவும் ஒலிநாடா தெரிவித்தது.

அத்துடன் எமது செயற்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எமது நடவடிக்கையைக் கைவிடும் நிலையில் நாம் இல்லை. கடந்த மே மாதம் 17 ஆம் திகதி இடைக்கால ஆளும்சபையின் உறுப்பினர் எசடீன் சலீம் கொல்லப்பட்டது போலவே பிரதமர் அலாவியும் கொல்லப்படுவார்.

அமெரிக்காவின் கொடுங்கோன்மையை அராபியர்கள்மூலம் ஈராக்கில் நடத்துவதனை நாம் அனுமதிக்கமாட்டோமென அந்த ஒலிநாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தடுத்துவைக்கப்பட்டுள்ள எட்டு பிரிட்டிஷ் கடற்படையினரையும் விடுவிக்க ஈரான் அரசாங்கம் முடிவு



(தெஹ்ரான்)

ஈரான் கடற்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்த எட்டு பிரிட்டன் நாட்டுக் கடற்படையினரையும் அவர்கள் பயணம்செய்த மூன்று கடற்படைப் படகுகளையும் விடுதலை செய்வதற்கு ஈரான் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக அந்நாட்டு இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

தடுத்துவைக்கப்பட்ட எட்டுப் பிரிட்டன் கடற்படையினரும் தாம் தவறுதலாகவே ஈரானின் கடற்பகுதிக்குள் பிரவேசித்ததாகத் தெரிவித்ததையடுத்தே எட்டுக் கடற்படையினரையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க ஈரான் அரசாங்கம் முடிவுசெய்ததெனவும் அவர் தெரிவித்தார்.

ஈராக்கின் கடல் ஆற்றுப் பகுதியில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இவர்கள் ஈரானின் கடற்பகுதியில் தவறுதலாகச் சென்றதாக பிரிட்டனின் பாதுகாப்பமைச்சு தெரிவித்தது.

ஈரானின் சிறையில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்று ஈரானிலுள்ள பிரிட்டன் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கவிருந்தனர்.

ஈரான் கடற்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்த பிரிட்டன் கடற்படையினர் வைத்திருந்த ஆயுதங்கள் அவர்களது ரோந்து நடவடிக்கைக்கே பயன்படுத்தினர் என்பதில ஈரானின் இராணுவ அதிகாரிகள் திருப்தியடைந்துள்ளதாக ஈரான் நாட்டுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இரு நாடுகளும் வெளியிடும் தகவல்கள் முரண்பாடாக உள்ளதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.




## ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு தபாலில் குண்டு அனுப்பிவைப்பு



(புதுடெல்கி)

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு தபாலில் துப்பாக்கி அனுப்பப்பட்டுள்ளது. இதை பீகாரிலிருந்து அனுப்பியவர் 7 மணிநேரத்தில் கைதுசெய்யப்பட்டார்.

ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு பீகாரிலிருந்து நேற்றுமுன்தினம் ஒரு பொதி தபாலில் வந்தது. அந்தப் பொதியை அனுப்பியவரின் விலாசம் 'மகேஷ் சவ், முஜாகித் பூர், பிர்சாவா போஸ்ட், பாட்னா, பீகார்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தப் பொதியை வழக்கம்போல ஜனாதிபதி மாளிகை அதிகாரிகள் எக்ஸ்ரே ஸ்கானிங் செய்தனர். அப்போது அதனுள் ஆபத்தான பொருள் இருப்பது தெரியவந்தது.

உடனடியாக வெடிகுண்டை அப்புறப்படுத்தும் பொலிஸ் பிரிவுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனே அவர்கள் விரைந்துவந்து பொதியை முன்னெச்சரிக்கையுடன் வெளியே எடுத்தச்சென்று திறந்துபார்த்தனர்.

அப்போது பொதியில் உள்ளூர்த் துப்பாக்கி ஒன்றும், ஒரு தோட்டாவும இருப்பதைக்கண்டு அதிர்ச்சி அடைநதனர். அந்தப் பொதியில் ஒரு கடிதமும் இருந்தது அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது -

இந்த உள்ளூர் துப்பாக்கியை நான் தயாரித்தேன். இதன் மாதிரி ஒன்றையும், தோட்டாவையும் உங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். தங்களிடம் இதுபற்றி நேரில் விளக்க எனக்கு தாங்கள் நேரம் ஒதுக்கித்தரவேண்டும். என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது..

இது குறித்து ஜனாதிபதி மாளிகை பொலிஸ் அதிகாரி தியாகி கூறுகையில் -

ஜனாதிபதி மாளிகைக்கு இந்தப் பொதியை வழக்கமாகவரும் தபாற்காரர் காலை 9.30 மணிக்கு கொண்டு வந்துகொடுத்திருக்கிறார். அந்தப் பொதியை உடைத்துப் பார்த்தபோது துப்பாக்கியின் உட்பகுதி ஏதோ திடப்பொருளால் நிரப்பப்பட்டு இருப்பது தெரியவந்தது. அது வெடிமருந்தா என்பதுபற்றி ஆய்வு நடக்கிறது என்று கூறினார்.

இதுபற்றி பீகார் பொலிஸுக்கு டெல்கி பொலிஸார் தகவல் கொடுத்தனர். உடனே பீகார் பொலிஸார் நடவடிக்கையில் இறங்கினர்.

முஜாகித் பூர் கிராமத்தில் மகேஷ் சவ் என்று பெயரில் யாரும் உள்ளனரா என்று பொலிஸ் விரைந்து சென்று விசாரணை நடத்தியபோது, உண்மையாகவே அங்கு அந்தப் பெயர் கொண்டவர் இருப்பது தெரிய வந்தது. அவரைப் பிடித்து பொலிஸார் விசாரணை நடத்தியபோது அவர் ஜனாதிபதிக்கு துப்பாக்கிப் பொதி அனுப்பியதை ஒத்துக்கொண்டார்.

40 வயதான விவசாயியான அவரை பொலிஸார் கைதுசெய்தனர். இவரையும் அவரது தந்தை ஜகுநந்தனையும் பொலிஸார் விசாரணைகாக அழைத்துச் சென்றனர்.


## மாநகரசபை, யாழ்ப்பாணம்

### மீள் கேள்வி அறிவித்தல் - 2004

மேற்படி என்னால் 05.06.2004 ம் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட 17 வீதி வேலைகளுக்கான கேள்வி அறிவித்தலானது கீழ்வரும் திகதிகளினால் மாற்றப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி:
*30.06.2004 பி.ப.2.30 மணி*

கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:
*01.07.2004 பி.ப.2.30 மணி*

கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:
*01.07.2004 பி.ப.3.00 மணி*

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
21.06.2004

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-2690)



## A/L வணிகக்கல்வி, கணக்கீடு

### ஆசிரியர்களிற்கான புதிய பாடத்திட்டக் கருத்தரங்கு

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள (க.பொ.த.உ/தரம்) புதிய பாடத்திட்டத்திற்கான (வணிகக்கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களிற்கான) கருத்தரங்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களால் நடாத்தப்படவுள்ளது. எனவே, இப்பாடங்களைக் கற்பிக்கின்ற சகல ஆசிரியர்களையும், ஆர்வமுள்ளவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இடம்:- $ch_2$ முகாமைக்கற்கைகள் வணிகபீட விரிவுரை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.
காலம்:- 26.06.2004 (சனிக்கிழமை)
நேரம்:- காலை 9.00 மணி
**குறிப்பு:-** 1) புதிய பாடத்திட்டத்திற்கான கைநூல் இலவசமாக வழங்கப்படும்
2) கருத்தரங்கில் பங்குபற்றுவோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

*நன்றி*

தலைவர்,
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(768)



## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

இறைச்சிக்காகவும், 'சூப்' செய்வதற்காக செட்டைகளுக்காகவும் 100 மில்லியன் எண்ணிக்கையான சுறாக்கள் ஒவ்வொரு ஆண்டும் வேட்டையாடப்படுகின்றன. செட்டைகளை வெட்டியெடுத்த பின்னர் சுறாக்கள் உயிருடன் கடலில் வீசிவிட அவை நீந்தமுடியாமல் அமிழ்ந்தும், இரத்தப் பெருக்கினாலும் பலியாகிவருகின்றன.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# போலி சான்றிதழ் தயாரித்தவர் பொலிஸாரிடம் சிக்கினார்!

## யாழ்.நகரில் நேற்று சம்பவம்

அரியாலைப் பகுதியில் போலி இறப்பர் முத்திரைகளைப் பயன்படுத்தி போலியான சான்றிதழ்களை தயாரித்துப் பணத்துக்கு விற்பனை செய்த நபர் ஒருவரைப் யாழ்.குற்றத் தடுப்புப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

அரியாலைப் புங்கங்குளம் பகுதியில் உள்ள ரயில்வேப் பாதையில் உள்ள தனியார் வீடு ஒன்றிலேயே போலிச் சான்றிதழ் தயாரிப்பு இடம் பெற்றுவந்துள்ளது.

இந்த நபர் பாடசாலைகள், கிராம அலுவலர்கள், மனித உரிமை ஆணைக்குழு, வைத்தியசாலைகள், நீதிமன்றங்கள், பிறப்புஇறப்பு பதிவாளர் திணைக்களம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் போலி இறப்பர் முத்திரைகளை தயாரித்து போலி ஆவணங்களை பணத்துக்கு விற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்குக் கிடைத் தகவலை அடுத்தே மேற்படி நபரை பொலிஸார் கைதுசெய்தனர். இவரிடம் இருந்து பெருந்தொகையான போலி இறப்பர் முத்திரைகளும் சான்றிதழ்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# புலிகளுடன் இணைய வந்த ஆறு சிறுவர்கள் ஒப்படைப்பு!

(அம்பாறை)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய வந்த 18 வயதிற்கு உட்பட்ட ஆறு சிறுவர்கள், அவர்களது பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப் பட்டனர்.

அம்பாறை மாவட்டம் - திருக்கோவிலில் உள்ள மாவட்ட அரசியற்துறை பணிமனையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் - யுனிசெப்பின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் வதிவிடப் பிரதிநிதி அன்றியா ஜேம்ஸ் முன்னிலையில் இந்த ஆறு சிறுவர்களையும் பெற்றோரிடம் கையளித்தார்.

இந்தச் சிறுவர்கள் கையளிப்பின் பின்னர், அங்கு உரையாற்றிய குயிலின்பன் தெரிவித்ததாவது -

எமது தலைமைப்பீடத்தின் கட்டளைக்கு அமைய 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை இயக்கத்தில் இணைப்பதில்லை என்ற முடிவை நூற்றுக்கு நூறுவீதம் நாம் நிறைவேற்றிவருகிறோம்.

ஆனால், தென்னிலங்கையிலுள்ள சிங்கள மற்றும் ஆங்கில நாளிதழ்கள், விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தை இது தொடர்பாக மேற்கொண்டு வருகின்றன.

இயக்கத்தில் இணையும் சிறுவர்களில் அக்கறை காட்டும் சிறுவர் நலன்காப்பு அதிகாரிகள் மற்றும் அமைப்புக்கள், எமது கிராமங்களில் தாய், தந்தையரை இழந்து பசி, பட்டினியால் வாடி, அவலத்துக்குள்ளாகும் சிறுவர் நலனிலும் அக்கறை காட்டுவார்களாக இருந்தால், இத்தகைய பிரஜைகளை எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாக்க முடியுமெனத் தெரிவித்தார். (07)

# ஹையேஸ் வான் மோதி மீன் வியாபாரி படுகாயம்

மீன்வியாபாரத்தில் ஈடுபட்டுவிட்டு ஐஸ் எடுக்கச் சென்ற மீன்வியாபாரி பின்னால் வந்த ஹையேஸ் வான் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

நேற்று மாலை 7 மணியளவில் கொட்டடிப்பகுதியில் மீன் வியாபாரத்தை முடித்துக்கொண்டு எஞ்சிய மீனை ஐஸ் போட்டுவைக்கும் நோக்கத்தோடு சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஈசன் (வயது 29) என்பவரை பின்னால் வந்த ஹையேஸ் வான் மோதியது.

இதனால் தலையில் படுகாயமடைந்த மீன் வியாபாரி அந்த இடத்திலேயே மயங்கி வீழ்ந்தார். பொது மக்கள் அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ். பொலிஸார் விபத்துககுக் காரணமான ஹையேஸ் வானை பொலிஸ நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

காயமடைந்த மீன் வியாபாரி தொடர்ந்தும் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

# சோமாலியாவில் பிடிபட்ட 46 பேர் கொழும்பு திரும்பினர்

(கொழும்பு)

சோமாலியாவில் நிர்க்கதி நிலையிலிருந்த 46 இலங்கையர்கள் நேற்று கொழும்பை வந்தடைந்தனர். இவர்கள் சட்டவிரோதமாக நீர்கொழும்பிலிருந்து இத்தாலிக்குச் செல்லும் வழியில் சோமாலிய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லும் இளைஞர்கள், டுபாய் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளின் ஊடாகவே பயணிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்தச் சட்டவிரோத பயணத்தின் போது சோமாலியப் படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் 46 பேர் நேற்று கொழும்பு திரும்பியிருந்தனர்.

சோமாலிய படையினரால் கைது செய்யப்பட்ட மேலும் 320 பேர் அந்த நாட்டில ஹொட்டல் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நாடு திரும்புவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் உதவிய கோரியபோதிலும், அதற்கு உரிய பதில் இன்னமும் கிடைக்கவில்லை.

இந்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்பவர்கள் தலா 6 லட்சம் ரூபா வரை செலுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் புலிகள்...

ஆரம்பிப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளது. இருந்தபோதிலும் சமாதானப் பேச்சுமூலம் தனி அரசொன்று உருவாவதை அவர்கள் விரும்பவில்லை.

அத்துடன், விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலிலிருந்து விலக்குவதற்கு அவர்கள் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

கடந்தவருடம் ஏப்ரல் மாதம் இலங்கையில் நடந்த தேர்தலின் பின்னர் அங்கு புதிதாக பதிவியேற்ற அரசுடன் சுதந்திர வர்த்தகம் தொடர்பான உடன்பாடு காணும் வகையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுவருகின்றது.

இரு நாடுகளும், வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றில் தற்போது உடன்பட்டுள்ளன.

புதிய அரசாங்கம் அமெரிக்காவுடன் பொருளாதார உறவுகளை தொடர்வதற்கு மிகுந்த ஆர்வமாகவுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம்.

அத்துடன், இலங்கை - அமெரிக்காவுடன் வர்த்தக உடன்பாட்டை பேணிவருகின்றது. வருடம் தோறும் இரண்டு நாடுகளும் இருநூறு கோடி டொலர்கள் பெறுமதியான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

324, Palaly Road, Jaffna.
யாழ் நகரில் Microsoft Certify System Engineers

Microsoft நிறுவனத்தினால் வழங்கப்படும் சர்வதேச தர சான்றிதழ்
நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.
மேலும் விபரங்களிற்கு, MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

# கடலட்டை கடத்தியோர் கைது

கடலட்டை கடத்திய இந்திய மீனவர்கள் இருவர் நேற்று மன்னார் கடலில்வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரிலிருந்து இந்தியாவிற்கு 24 மூடைகளில் கடலட்டை கடத்த முற்பட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இவர்கள் மீதான விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## நாடாளுமன்றைக்...

மன்ற உறுப்பினர்கள் 114 பேர் ஒப்பமிட்டு சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட கடிதத்தினை அடிப்படையாகக்கொண்டு நாடாளுமன்றத்தை ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டவேண்டும் என்ற வேண்டுகோளை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பதற்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

## ஊழியர்கள்...

குறிப்பில் -

வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் தொடர்ந்தும் பணியில் இணைந்துகொள்வதற்கு நிர்வாகத்துடன் இணக்கம் காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## கருணாவுக்கு...

இந்த அறிக்கையில் மேலும் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் உட்பிரச்சினையில் தலையிடுவதில்லை என்ற கொள்கையையே ஐ.தே.க. கொண்டுள்ளது. போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஐ.தே.க. - விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதிலேயே நாட்டம் காட்டியது.

எனினும், இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டுவருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நேற்றைய...

யர் சங்கப் பொதுக் கூட்டத்திலே எடுக்கப்படும் எனவும் ஊழியர் சங்கம் நேற்றுப் பிற்பகல் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் இன்று இடம்பெற்ற சந்திப்பின் போது ஊழியர் சங்கப் போராட்டத்தை சுமுகமான முறையில் தீர்த்துவைப்பதற்கான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியத் தலைவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மிதிவெடி...

எமது மக்களை அங்கவீனர்களாக் காதீர்கள் என்பன போன்ற கோஷங்களுடன் கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாக ஒன்று திரண்டனர்.

தொடர்ந்து ஜனாதிபதிக்கும், யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும், யாழ்.மாவட்டத்தில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு பொறுப்பான அதிகாரிகளுக்கும் மகஜர்களை, மிதிவெடி அபாயக் கல்விவார தொண்டர் சிவரஞ்சினி பிரதேச செயலர் சா.அஞ்சலி தேவியிடம் ஒப்படைத்தார்.

இந்தப் பேரணியில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், மிதிவெடி அகற்றும் பணியாளர்கள், பொது அமைப்புகளைச் சேர்ந்தோர் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கையளிக்கப்பட்ட மகஜர்களை உரியவர்களுக்கு தாம் அனுப்பி வைப்பதாக கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

# மாட்டிறைச்சி விற்பனைக்கு வன்னியில் தடை விதிப்பு!

கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவிவருவதால், வன்னியில் மாட்டிறைச்சி விற்பனைக்கு தற்காலிக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தமிழழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்பினருக்கும் கால்நடை வளர்ப்போருக்குமான கலந்துரையாடல் ஒன்றில் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார். கிளிநொச்சியில் அமைந்துள்ள பண்பாட்டு மண்டபத்தில நேற்று இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய கரிகாலன் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது வன்னிப் பிரதேசத்தில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய் பரவி வருவதால், மக்களின் சுகாதார நலன்கருதி மாட்டிறைச்சி விற்பனையை இடைநிறுத்தியுள்ளோம்.

மக்களுக்கு நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும், கால்நடைகளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நோயைக் கட்டுப்படுத்தவுமே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# நிலத்தில் வீழ்ந்து காயமுற்றவர் நேற்று அதிகாலை மரணம்!

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் தலையில் படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று அதிகாலை மரணமானார். 23 வயதான நடராஜா தயாரூபன் என்பவரே மரணமடைந்தவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்று முன்தினம் இரவு யாழ். பேருந்து நிலையத்தினுள் நிலத்தில் வீழ்ந்து தலையில் படுகாயமடைந்த நிலையிலே மேற்படி நபர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பலனளிக்காததால் இவர் பரிதாபகரமாக மரணமானார். இந்நபரின் உடல் வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# 26 தமிழ் அகதிகள் மணல்திட்டிலிருந்து மீட்பு

தமிழ்நாடு ராமேஸ்வரத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 26 தமிழ் அகதிகளைக் கடற்படையினர் நேற்றுக்காலை மணல்திட்டி ஒன்றிலிருந்து மீட்டனர்.

ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 26 அகதிகளும் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இந்தியப் படகுகள்மூலம் இவர்கள் நாடுதிரும்பியதாகவும் இவர்களை ஏற்றிவந்த படகு மணல்திட்டில் இறக்கிவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இவர்கள் ராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டதாகத் தெரிவித்தனர்.

## கைதுசெய்வதற்கு...

வித்ததுடன் நீதிமன்ற அழைப்பாணையைக் கோரினர்.

நீதிமன்ற அழைப்பாணையை எடுத்துவரவில்லை எனப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து நீதிமன்ற அழைப்பாணை இன்றிக் கைது செய்யமுடியாது என அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு கூடி நின்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. இந்நிலையில் பொலிஸார் கைதுசெய்யும் முயற்சியைக் கைவிட்டு திரும்பினர்.

இந்தச சம்பவம் குறித்து பொலிஸ ஆணைக்குழு, சபாநாயகர் ஆகியோருக்கும் முறைப்பாடு செய்வதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கு நெருக்கமான பொலிஸ் அதிகாரி ஒருவரே இவரைக் கைதுசெய்வதற்கு முன்னின்றதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது. (01)

## கருணா தப்பியோட...

கருணாவை கொழும்புக்கு அழைத்துச்செல்ல உதவியது தொடர்பாக எழுந்த சர்ச்சைகளைத் தொடர்ந்தே தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைவிட்டு விலகியதாக அலிசாகிர் மௌலானா ஐக்கியதேசியக்கட்சிக்கு அறிவித்துள்ளார்.

கருணாவை கொழும்புக்கு அழைத்து வந்ததாகவும் ஆனால் அதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கருணாவைக் கொழும்புக்கு அழைத்து வந்த பின்னர் படையினர் நடந்துகொண்ட முறையைத் தம்மால் கட்டுப்படுத்த முடியாது போய்விட்டதாகவும் அலிசாகிர் மௌலானா தெரிவித்தார்.

கருணா விவகாரத்தால் தமது கட்சிக்கும் கட்சித் தலைமைக்கும் அவப்பெயர் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கிலேயே தாம் பதவி விலகுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## நாணயமாற்று விகிதம்

| நாடுகள் | கொள்வனவு | விற்பனை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 101.37 | 102.62 |
| ஸ்ரேலிங்பவுண் | 184.77 | 187.43 |
| யூரோ | 122.89 | 124.91 |
| சுவிஸ்பிராங் | 81.00 | 82.81 |
| அவுஸ்ரேலிய டொலர் | 69.44 | 71.02 |
| ஜப்பான் யென் | 00.93 | 00.94 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.